வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 05 04.08.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 217 பக்கங்கள் : 16




# துரோகம் இழைத்தார் ரணில் இனி அவரை நம்பமாட்டோம்

## விக்னேஸ்வரன் எம்.பி. திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 04

**"கடந்த செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கை வைத்திருந்தேன். ஆனால் அவர் அந்த நம்பிக்கைக்கு துரோகம் இழைத்துவிட்டார். அதனால் இனியும் அவர் நல்லவர் - நம்பிக்கைக்கு உரியவர் என்று சொல்லமுடியாது."**

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது உள்ள ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோரில் தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்கக்கூடியவர்கள் என யாரை நம்பலாம் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

மற்ற வேட்பாளர் ஓர் இளைஞர். இவர்களில் யார் நல்லவர் என்று சொல்ல முடியாத நிலை உள்ளது.



அவர்கள் இருவரும் சிங்கள பௌத்த எண்ணத்தில் ஊறி இருப்பவர்கள். அதில் இருந்து வெளியே வரக்கூடியவர்களாக அவர்கள் 15

# மருத்துவர் அர்ச்சுனா கைது!

மன்னார், ஓக. 04



மன்னார் வைத்தியசாலை மருத்துவர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்னாள் அத்தியட்சகர் மருத்துவர் இ.அர்ச்சுனா நேற்றுச் சனிக்கிழமை மதியம் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு மன்னார் பொது வைத்தியசாலைக்குள் நுழைந்து குழப்பத்தை ஏற்படுத்தினார் என மன்னார் வைத்தியசாலை 15

# சஜித் பக்கம் பாய்ந்த தயாசிறியின் அணி!

கொழும்பு, ஓக. 04

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாவுக்கு ஆதரவளிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தலைமையிலாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி அணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட 15

# ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் 3ஆவது மீளாய்வு குறித்து முடிவு

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 04

இலங்கை அரசாங்கத்துடன், விரிவான நிதி வசதித்திட்டம் தொடர்பான மூன்றாவது மீளாய்வுக் காலம் குறித்து கலந்துரையாட எதிர்பார்த்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுவர் பீற்றர் ப்ரூவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், இலங்கை அரசாங்கத்துடன், விரிவான நிதி வசதித்திட்டம் தொடர்பான மூன்றாவது மீளாய்வு காலம் குறித்து கலந்துரையாடவுள்ளதாக அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான நிதி வசதித் திட்டத்தின் கீழ், இலங்கையின் பொருளாதார 15

# ஈழத் தமிழ் அகதிகளை இந்திய அரசு கட்டாயப்படுத்தி வெளியேற்ற திட்டம்!

## பழ.நெடுமாறன் கடும் எதிர்ப்பு

சென்னை, ஓக. 04

"விசா அனுமதியோ அல்லது வேறு தகுந்த ஆவணங்கள் இல்லாமலோ நீண்டகாலமாக இந்தியாவில் தங்கியிருப்பதாகவும், அதற்குரிய விளக்கத்தை ஒருவார காலத்துக்குள் நேரில் வந்து அளிக்கவேண்டுமென தமிழகத்தில் அகதிகளாக வந்து தங்கியுள்ள ஈழத் தமிழர்கள் நூற்றுக் கணக்கானவர்களுக்கு வெளிநாட்டினர் பதிவு அலுவலகத்திலிருந்து முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் அரசியல் குழப்பமும், கடும் பொருளாதார நெருக்கடியும் நீடிக்கின்றன. தமிழர் பகுதியில் சிங்கள இராணுவத்தின் கெடுபிடிகள் தொடர்கின்றன. 15

# ரணிலுடன் சென்றோர் மீண்டும் வருவார்கள்!

## நம்புகின்றது மொட்டு கட்சி

கொழும்பு, ஓக. 04

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ள பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களில் சிலர் மீண்டும் கட்சிக்கு வருவார்கள் என்று மொட்டுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு 15

# சுன்னாகத்தில் விபத்து; பெண் ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 04

சுன்னாகம் சந்திப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

சுன்னாகம் சந்திப் பகுதியில் காங்கேசன்துறை வீதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஹைஏஸ் வான் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காங்கேசன்துறை வீதியை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் அதே திசையில் பயணித்த வான் மோதியுள்ளது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் 15

# சஜித்தை தோற்கடிக்க சதி!

## நளின் பண்டார குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 04

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை தோற்கடிக்கும் முயற்சி இடம்பெற்றுவருவதாக பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியாளர்கள் ஒன்றிணைந்து விஸா மோசடியை மேற்கொண்டுள்ளனர். எதிர்க்கட்சித் தலைவரே இந்த மோசடி தொடர்பில் பாராளுமன்றத்தில் முதலில் சுட்டிக்காட்டி பேசியிருந்தார். இந்த விஸா மோசடி மத்திய வங்கி மோசடி போன்ற பல மடங்கு மோசடியாகும். 15

# மொட்டு வேட்பாளர் தம்மிக்க பெரேரா?

கொழும்பு, ஓக. 04

பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவை களமிறங்குவதற்கான இறுதி முடிவை அந்தக் கட்சி எடுத்துவிட்டது என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வேட்பாளரை அறிவிக்கும் நிகழ்வை எதிர்வரும் 05 ஆம் திகதி நடத்துவதற்கு முன்னதாக திட்டமிடப்பட்டிருந்தாலும் அந்த நிகழ்வை 7 ஆம் திகதி நடத்துவதற்கு தற்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது. 15

# ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு சென்ற ஜனாதிபதி ரணில்

யாழ்ப்பாணம், ஓக. 04

யாழ்ப்பாணத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் நடந்த விசேட கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி 15

# ரணிலுக்கு ஆட்சேர்க்கும் பொறுப்பு பிரசன்னவிடம்!

## நடவடிக்கைகள் தீவிரம்

கொழும்பு, ஓக. 04

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க உடன்பட்டுள்ள பொதுஜன பெரமுனவின் முன்னாள் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடும் செயல்பாடுகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த செயல்பாடுகளுக்கு தலைமையில் தாங்குகின்றார்.

இதன்படி, ஜனாதிபதி ரணில் 15

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ-9 வீதியில் 3 வாகனங்கள் விபத்து அதிர்ஷ்டவசமாக தப்பிய சாரதி



யாழ்ப்பாணம், ஒக. 04

யாழ்ப்பாணம் ஏ - 9 வீதியில் வாகனத்தை முந்திச் செல்ல முயன்ற ஹயஸ் வாகனத்தால் மூன்று வாகனங்கள் மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்து நேற்றுக் காலை 7. 45 மணியளவில் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பேருந்து, ஹயஸ் வாகனம், டிப்பர் என்பன முறையே தொடர்ச்சியாக பயணித்துள்ளன.

ஒரு கட்டத்தில் ஹயஸ் வாகன சாரதி பேருந்தை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரே வந்த வாகனத்தால் சடுதியாக ஹயஸ் வானை திருப்ப முற்பட்ட போது பேருந்து பின்பகுதியுடன் ஹயஸ் வாகனம் மோதியது.

ஹயஸ் வாகனத்துக்கு பின்னால் வந்த டிப்பரும் ஹயஸ் வாகனத்தின் பின்பகுதி யில் மோதி விபத்துக்குள்ளா னது.

குறித்த விபத்து காரணமாக ஹயஸ் வாகனம் பலத்த சேதமடைந்ததுடன், பேருந்தின் பின்பகுதி, டிப்பரின் முன்பகுதி என்பன சிறியளவில் சேதமடைந்தன.

இந்த விபத்தின் போது ஒருவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படாத நிலையில் ஹயஸ் வாகனத்தின் சாரதி காயமடைந்தார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# போதைப்பொருள் குற்றம் மேலும் 732 பேர் சிக்கினர்

கொழும்பு, ஒக. 04

நாடளாவிய ரீதியில் நேற்றுக் காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 732 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 719 ஆண்களும் 13 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் கூறினர்.

இந்த சந்தேக நபர்களில் 10 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளது டன், 10 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 260 கிராம் 76 மில்லி கிராம் ஹெரோயின், 250 கிராம் மில்லி 02 கிராம் ஐஸ், 21,139 கிராம் மில்லி 574 கிராம் கஞ்சா, 168 போதை மாத்திரைகள் மற்றும் 1,906 கஞ்சா செடிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (எ)

# அதிவேக வீதியில் வாகன நெரிசல்

கொழும்பு, ஒக. 04

கொழும்பு, கொட்டாவ மற்றும் பன்னிப்பிட்டியவுக்கு இடையிலான அதிவேக வீதியில் நேற்றுக் காலை கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இந்த வழியாக செல்லும் வாகனச் சாரதிகளை மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நுகேகொடை போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகள் வாகன நெரிசலை சீர் செய்யும் பணியில் ஈடுபட்டனர். (எ)

# யாழ்.நவாலி தெற்கு அ. மி. த. க. பாடசாலையில் சிறுவர் சந்தை



யாழ்ப்பாணம், ஒக. 04

யாழ்ப்பாணம் நவாலி தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் சிறுவர் சந்தை செயல்பாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் அல்பிரட் நிமலகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் ஓய்வுநிலை ஆசிரியை செந்தினி தர்மசீலன் கலந்து கொண்டார்.

இந்த சிறுவர் சந்தையில் அயல்பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சூழலில் உள்ள பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இந்தச் செயல்பாட்டின் மூலம் குறித்த பாடசாலை மாணவர்கள் பொருட்களை விற்பனை செய்தல், பொருட்களை கொள்முதல் செய்தல் என்பவற்றில் களநிலை அனுபவத்தை பெற சிறந்த இடமாகவும் இந்த சிறுவர் அமைந்தது. (எ)

# மரதன் ஓட்டப்போட்டி

கல்முனை, ஒக. 04

அறுகம்பே அபிவிருத்தி போரம் ஏற்பாடு செய்துள்ள சர்வதேச அரை மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அந்த போரத்தின் தலைவர் எம். ஹாஜித் தெரிவித்தார்.

அறுகம்பே விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

உலகில் நடைபெற்றுவரும் பிரசித்திபெற்ற மரதன் ஓட்டப் போட்டிகளில் அறுகம்பே அரை மரதன் போட்டியும் இடம்பிடிக்க வேண்டும் எனும் நோக்கில், அறுகம்பே மரதன் ஓட்டப்போட்டியை நடத்தி வருகின்றோம். இம்முறை 6ஆவது தடவையாகவும் குறித்த மரதன் ஓட்டப் போட்டியை மிகவும் சிறப்பாக நடத்தவுள்ளோம். அறுகம்பே அரை மரதன் ஓட்டப் போட்டியானது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இப்போட்டியில் உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் என 200 பேர் பங்கேற்கவுள்ளனர். இதில் 150 உள்நாட்டு வீரர்களும் 50 வெளிநாட்டு வீரர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். இதில் பிரதேச மரதன் ஓட்ட வீரர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த மரதன் போட்டியானது 21. 1 கிலோ மீற்றர், 10 கிலோ மீற்றர், 5 கிலோ மீற்றர் என 3 பிரிவுகளாக நடைபெறவுள்ளன. 21. 1 கிலோ மீற்றர் பிரிவில் 17 வயதுக்கு மேற்பட்டவர்களும் 10 கிலோ மீற்றர் பிரிவில் 17 வயதுக்கு மேற்பட்டவர்களும் 5 கிலோ மீற்றர் பிரிவில் 12 - 17 வயதுடைய சிறுவர்களும் பங்குபற்ற முடியும் - என்றார் (எ)



# வல்வைப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக. 04

1989 ஆம் ஆண்டு இடம்பெற்ற வல்வைப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களால் வல்வெட்டித்துறை கடற்கரையில் நினைவுகூரப்பட்டது. (எ)

# மகளை மோதிய லொறியை துரத்திய தந்தை உயிரிழப்பு

இரத்தினபுரி, ஒக. 04

இரத்தினபுரி, பலாங்கொடை நகரில் மோட்டார் சைக்கிளை மோதி 7 வயது சிறுமியை காயப்படுத்திவிட்டு தப்பிச்சென்ற லொறியை துரத்திச் சென்ற தந்தை உயிரிழந்த சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர் பலாங்கொடை பிரதேசத்தை சேர்ந்தவர் என அடையாளங் காணப்பட்டுள்ளார்.

பலாங்கொடை பகுதியில், இந்த லொறி சாரதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை மோதி ஏழு வயது சிறுமியை காயப்படுத்திவிட்டு லொறியை நிறுத்தாமல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

பின்னர், சிறுமியின் தந்தை மோட்டார் சைக்கிளில் லொறியை துரத்திச் சென்று லொறியின் கதவில் ஏறி சாரதியை கீழே இறக்க முற்பட்ட வேளை, தந்தை விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 32 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது, அந்தப் பகுதியில் அருகில் உள்ள வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி. சி. ரிவி காட்சிகளை ஆய்வு செய்ததில் லொறியின் சாரதி அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, லொறியின் சாரதி பலாங்கொடை பதில் நீதிவான் முன் முற்படுத்தப்படவுள்ளார். (எ)

# இணையவழி மோசடி; சிக்கிய சீன பிரஜைகள்

கொழும்பு, ஒக. 04

இணைய வழியில் முறைகேடுகளில் ஈடுபட்ட சீன பிரஜைகள் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய, காலி பொலிஸாரால் உடுகம பகுதியில் உள்ள தற்காலிக தங்குமிடம் ஒன்றில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் 24 மற்றும் 36 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்களிடம் இருந்து 9 கணினிகள், 73 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் பெருந்தொகையான சிம் அட்டைகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் குறிப்பிட்டனர். (அ)

# பாராளுமன்றம் அருகில் விபத்து நான்கு இளைஞர்கள் படுகாயம்

கொழும்பு, ஒக. 04

பாராளுமன்றத்துக்கு அருகில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் நான்கு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக வேகத்துடன் பயணித்த கார், சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, நான்கு இளைஞர்கள் காயமடைந்துள்ள நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# தேர்தல் சட்டமீறல்கள் குறித்து இதுவரை 45 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக. 04

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பில் 45 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளில் பெரும்பாலானவை அரச அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதை உள்ளடக்கியதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்பு, மு. காவிடம் ஆதரவை பெற்றுக்கொள்ளுங்கள்

## ரணிலின் விசுவாசிகளுக்கு நாமல் பதிலடி

கொழும்பு , ஓக. 03

**"ராஜபக்ஷக்கள் தற்போது இல்லை, எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் பேச்சு நடத்தி ஆதரவை பெற்றுக்கொள்ளுங்கள்."**


**இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசுவாசிகளுக்கு பதிலடி கொடுத்துள்ளார் மொட்டு கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ.**

இது தொடர்பில் அவர் கூறியவை வருமாறு,

ராஜபக்ஷக்கள் இருப்பதால் தமிழ், முஸ்லிம் கட்சிகள் ரணிலுக்கு ஆதரவு வழங்கவில்லை என முன்னர் கூறிவந்தனர். ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களும் வருவதில்லை எனவும் குறிப்பிட்டனர். தற்போது நாங்கள் இல்லை, தமிழ்க் கூட்டமைப்பினருடன் கதைத்து ஆதரவைப் பெறுங்கள், ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன் உள்ளிட்டவர்களுடன் பேச்சு நடத்தியும் ஆதரவை கோருங்கள்.

மொட்டு அணியினர் சிங்கள பௌத்த சிந்தனை மற்றும் இடதுசாரி கொள்கை உடைய தரப்பு என்பதால்தான் அவர்கள் வருவதில்லை என்றுதானே கூறிர்கள், இப்போது அதற்கான தடை இல்லையே?

எங்களுக்கும் கணக்கு காட்டத் தெரியும். அன்று நாம் ஜனாதிபதிக்கு ஆதரவளித்தபோது அந்த முடிவை விமர்சித்தவர்களே இன்று ஜனாதிபதி பக்கம் உள்ளனர். நானும் ஜனாதிபதியை ஆதரிக்கும் முடிவை எடுத்திருந்தால் சிறந்த தலைவர் என போற்றி இருப்பார்கள். ஆனால் கட்சி முடிவுடன் நான் இருப்பதால் விமர்சிக்கின்றனர். எனக்கு தனி நபர்கள் பற்றி கவலை இல்லை. கொள்கையே முக்கியம் என்றார்.



# புத்தல - கதிர்காமம் வீதியில் சிறுத்தைகளின் நடமாட்டம்

## பிரதேசவாசிகள் அச்சம்

கதிர்காமம், ஓக. 04

புத்தல - கதிர்காமம் வீதியில் கடந்த சில நாட்களாக சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் பிரதேசவாசிகள் அச்சத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த சிறுத்தைகள் பெரும்பாலும் பிற்பகல் மற்றும் இரவு வேளைகளில் வீதியில் நடமாடுகின்றன.

எனவே, புத்தல - கதிர்காமம் வீதியில் பயணிக்கும் வாகனங்கள் குறிப்பாக மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பவர்கள் மிகவும் அவதானத்துடன் செயல்படுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாகவும் உணவுத் தேவைக்காகவும் இந்த சிறுத்தைகள் இவ்வாறு வீதியில் நடமாடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# காற்றை விடுவித்த பொலிஸ் சார்ஜன்ட்

## ஒழுக்காற்று விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு, ஓக. 04

கொழும்பு, வத்தளை - மாபொல பகுதியில் உள்ள கொள்கலன் முற்றத்துக்கு செல்வதற்காக வந்த லொறி ஒன்று சாரதியின்றி வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரணத்தால், போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் லொறியின் முன்பக்க சில்லின் காற்றை விடுவிக்கும் காணொலி சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது.

வீதியின் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தமையால் இவ்வாறு காற்று விடுவிக்கப் பட்டதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அப்போது அங்கிருந்த சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஆவணங்களை ஒப்படைப்பதற்காக கொள்கலன் முற்றத்துக்கு சென்றதாக அந்த இடத்துக்கு வந்த லொறியின் சாரதி தெரிவித்தார்.

இதற்கிடையில் லொறியின் சாரதிக்கு பொலிஸ் உத்தியோகத்தர் அபராதச் சீட்டை கொடுத்து விட்டு அந்த இடத்தை விட்டு சென்றுள்ளார்.

எவ்வாறாயினும், இந்தச் சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் மேற்கொண்ட நடவடிக்கை முற்றிலும் சட்டவிரோதமானது எனவும் அவ்வாறான குற்றத்துக்கு அபராதம் மட்டுமே விதிக்க முடியும் எனவும் பொலிஸார் கூறினர்.

இவர் போன்ற அதிகாரிகளின் நடவடிக்கையால் ஒட்டு மொத்த பொலிஸாருக்கும் அவப்பெயர் ஏற்படும் என்பதால் அவர் மீது கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் ஒழுக்காற்று விசாரணைக்காக குறித்த அதிகாரி பொலிஸ் போக்குவரத்துப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (எ)

# திருக்கோவிலில் இன்று காலை 10 மணிக்கு ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம்

திருக்கோவில், ஓக. 04

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சிறீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை 4ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி தொண்டர் படை உறுப்பினர்களுக்கான அறிவித்தல் கலந்துரையாடல் சிறீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய தலைவரின் வேண்டுகோளுக்கு அமைய பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பொது மக்களுக்கான பாதுகாப்பை அதாவது அவர்களின் உடைமைகள் திருட்டு போகாமல் அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிப் பேசப்பட்டது. அதுமட்டுமல்லாமல் பொதுமக்கள் அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கப்படும் என திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பத்மகுமார தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். பத்மகுமார, சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். ஜெகசுதன், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம். அரசரட்ணம், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ. கந்தசாமி மற்றும் ஆலய வண்ணக்கர் வ. ஜெயந்தன், செயலாளர் ஏ. செல்வராசா, தொண்டர் படை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, மற்றுமொரு பாதுகாப்பு கூட்டம் நேற்றுச் சனிக்கிழமை திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இதில், இன்றைய ஆடி அமாவாசை தீர்த்த உற்சவத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதற்காக முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தீர்த்தம் அன்று பிதிர்க்கடன் செலுத்துகின்றவர்களுக்கு வசதியாக சிவாச்சாரியார்களை உள்ளடக்கி பிதிர்க்கடன் செலுத்தல் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# ஓட்டோ - 2 கார்கள் விபத்து; தம்பதி உட்பட மூவர் காயம்

கொழும்பு, ஓக. 04

ஓட்டோ ஒன்றின் மீது இரண்டு கார்கள் மோதியதில் மூவர் காயமடைந்தனர்.

கொழும்பு, பிலியந்தலை பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த விபத்தில் கணவன், மனைவி உட்பட மூவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த கணவன், மனைவி இருவரும் களுபோவில மருத்துவமனையை நோக்கி ஓட்டோவில் பயணித்துக்கொண்டிருக்கும் போது பாடசாலையை முடித்து வீட்டுக்குச் செல்வதற்காக பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்த மாணவியொருவரை கண்டுள்ளனர்.

இந்த நிலையில், கணவன், மனைவி இருவரும் பாடசாலை மாணவியை ஓட்டோவில் ஏற்றி பிலியந்தலை பிரதேசத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது ஓட்டோவில் இரண்டு கார்கள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தின் போது, ஓட்டோவில் பயணித்த 74 வயதுடைய கணவனும் 68 வயதுடைய மனைவியும் பாடசாலை மாணவியும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பிலியந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ஆணின் சடலம் மீட்பு

அநுராதபுரம், ஓக. 04

அநுராதபுரம், மல்வத்து ஓயா பாலத்துக்கு அருகில் நேற்றுச் சனிக்கிழமை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கண்டறியப்படவில்லை.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# விக்கிரமபாகு கருணாரட்ன நினைவுகூர் நிகழ்ச்சி இன்று

யாழ்ப்பாணம், ஓக. 04

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்னவின் நினைவுகூர் நிகழ்ச்சி இன்று பிற்பகல் 3. 30 மணிக்கு யாழ்ப்பாணம், திருநெல்வேலி சிவன் வீதியிலுள்ள பிறை இன் மண்டபத்தில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறும்.

இதில் நவ சம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் ரணத்குமார சிங்க, சமூக அரசியல் செயல்பாட்டாளர் ம. செல்வின் இரேனியஸ் ஆகியோர் உரையாற்றுவார்கள். (எ)

# சுற்றுலாத்துறை மூலம் நாட்டுக்கு 1,557 மில்லியன் டொலர் வருமானம்


கொழும்பு, ஓக. 04

இந்த வருடத்தின் முதல் 6 மாத காலப்பகுதியில் சுற்றுலாத்துறை மூலம் 1,557 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தின் இந்த காலப்பகுதியில் சுற்றுலாத்துறை வருமானம் 875 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்தது.

சுற்றுலாத்துறை தவிர, இந்த வருடத்தின் முதல் 6 மாத காலப் பகுதியில் சேவைத்துறை 1,762 மில்லியன் அமெரிக்க டொலரை பதிவு செய்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஏனைய மதத்தவர்களை தாக்க யாருக்குமே உரிமை இல்லை!

## பிக்குகள் முன் சஜித் பிரேமதாஸ

குருநாகல், ஒக. 04

**எந்த மதத்தை கடைப்பிடிக்கவோ அல்லது பின்பற்றவோ யாருக்கும் உரிமை உண்டு. ஆனால், மதத்தை கடைப்பிடிக்காதவர்கள் ஏனைய மதத்தவர்களை தாக்க அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. இது மதத்தை அவமதிக்கும் செயலாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

தற்போதும் கூட எமது நாட்டில் பௌத்தம் மற்றும் ஏனைய மதங்களில் நம்பிக்கை இல்லாதவர்களும் இருந்து வருகின்றனர். அவர்கள் மதத்தை கடைப்பிடிப்பதில்லை. அது அவர்களின் உரிமை அதிலும் யாரும் தலையிட முடியாது என்றும் சஜித் சுட்டிக்காட்டினார்.

எமது நாடு இன்று ஒரு பயங்கரமான சூழலை எதிர்கொண்டுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்கள் சுமார் 100 பில்லியன் டொலர்கள் காணப்படுகின்றன. தனிநபர் கடன் கிட்டத்தட்ட 12 இலட்சமாகும். இந்த நிலையில் இருந்து 2048 இல் மீள முடியும், இதற்கு இன்னும் கால அவகாசம் தேவைப்படும் என பல்வேறு தரப்பினரும் கூறுகின்றனர். எமது நாட்டின் கடனை 2032 ஆம் ஆண்டு முதல் செலுத்த முடியும் என கூறப்பட்ட நிலையில், தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் 2028 ஆம் ஆண்டிலிருந்து கடனை செலுத்துவதாக உறுதியளித்துள்ளது. நாடாகக் கட்டியெழுப்பும் சந்தர்ப்பம் தவறவிடப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி இத்தகைய கொள்கைகளில் இல்லை எனவும் சஜித் கூறினார்.

நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் "விழுமியம் மிக்க சமூகத்துக்கான பிக்குகள் ஆலோசனை பேரவையின்" குருநாகல் மாவட்ட மாநாடு சஜித் பிரேமதாஸ தலைமையில் குருநாகல் நகரில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பல்வேறு பிரச்னைகளால் இன்று பல விகாரைகள் மூடப்பட்டுள்ளன. அந்தந்த கிராமங்களிலும் நகரங்களிலும் அமைந்து காணப்படும் மத வழிபாட்டுத் தலங்கள் அந்தந்த கிராமங்களினதும் நகரங்களினதும் சுபீட்சத்தின் மையங்களாகும். விகாரை கட்டமைப்புகளை பாதுகாத்து போஷித்து, மேம்படுத்துவதற்கு விசேட திட்டத்தை மீண்டும் கொண்டு வருவேன். இதன் மூலம் விகாரைகள் மற்றும் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களை அபிவிருத்தி செய்வேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(எ)

# சமஷ்டி தீர்வை வலியுறுத்தி துண்டுபிரசுரம் விநியோகம்

திருகோணமலை, ஒக. 04

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைத்து மேற்கொள்ளப்பட்ட 100 நாள் செயல்முனைவின் இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு வடக்கு - கிழக்கு எங்கும் சமஷ்டி தீர்வை வலியுறுத்தி துண்டுபிரசுர பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் திருகோணமலை சிவன்கோவில் பகுதி மற்றும் லிங்கநகர் சந்தி பகுதிகளில் வெள்ளிக்கிழமை மாலை துண்டுபிரசுரம் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த பிரசார நடவடிக்கையானது தொடர்ச்சியாக 90 நாட்களுக்கு வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் எங்கும் நடைபெறவுள்ளதாகவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி தீர்வு தொடர்பான விடயங்களை முன்வைப்பார்களாக இருந்தால் அவர்கள் சார்ந்து தமிழ் மக்கள் வாக்களிக்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தெரிவித்தார்.

(எ)

# சாரதி உறங்கியதால் மதிலில் மோதி வான் விபத்து; மூன்று பேர் படுகாயம்



இரத்தினபுரி, ஒக. 04

வான் வீதியை விட்டு விலகி அருகிலிருந்த வீடொன்றின் மதிலில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து இரத்தினபுரி, அயகம - எகல்ஓயா வீதியில் கவரகிரிய பகுதியில் இடம் பெற்றது. இந்த விபத்தில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

வான் சாரதி உறங்கியதால் இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தின் போது வானில் பயணித்த மூவர் படுகாயமடைந்துள்ள நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(எ)

# நாயையும் குட்டிகளையும் விழுங்கிய மலைப்பாம்பு

## மாத்தறையில் சம்பவம்

மாத்தறை, ஒக. 04

மாத்தறை, மாகந்துர, ஜன உதாகம பகுதியில் வீடொன்றில் வளர்க்கப்பட்ட நாயையும் அதன் நான்கு குட்டிகளையும் மலைப்பாம்பு ஒன்று விழுங்கிய சம்பவம் இடம்பெற்றது.

வீட்டின் உரிமையாளர்கள் கடந்த முதலாம் திகதி பிற்பகல் தங்களது வீட்டு முற்றத்தில் மலைப்பாம்பு ஒன்று அசைய முடியாமல் இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதேவேளை, வீட்டு முற்றத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்த நாயும் அதன் நான்கு குட்டிகளும் காணாமல் போனதை அறிந்துள்ளனர்.


பின்னர், தங்களது வளர்ப்பு நாயையும் அதன் நான்கு குட்டிகளையும் இந்த மலைப்பாம்பு




விழுங்கியதை வீட்டின் உரிமையாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து, வெலிகம, பெலன பகுதியில் உள்ள பாம்பு பிடிக்கும் இளைஞர் ஒருவர் இந்த மலைப்பாம்பை எடுத்துச் சென்று வனப்பகுதியில் விடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

(எ)





ஈழத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி சிறீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது.

# ரூ.1, 50, 000 இலஞ்சம் வாங்கிய பொலிஸ் சார்ஜன்ட் சிக்கினார்

கொழும்பு, ஒக. 04

கொழும்பு, வத்தளை - மஹாபாகே நீதிமன்றத்துக்கு அருகில் நபர் ஒருவரிடமிருந்து ஒரு இலட்சத்து 50, 000 ரூபாயை இலஞ்சமாக வாங்கிய குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் மஹாபாகே பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றுபவர் ஆவார்.

உஸ்வெட்டிகெய்யாவ பகுதியில் வசிக்கும் ஒருவருக்கு 'யுக்திய' நடவடிக்கையின் கீழ் அசௌகரியம் ஏற்படுத்தாமல் இருப்பதற்கும், போதைப்பொருள் தொடர்பான பெயர் பட்டியலில் அவரது பெயரை சேர்க்காமல் இருப்பதற்கும், அவரை சோதனைக்கு உட்படுத்தாமல் இருப்பதற்காகவும் இலஞ்சம் கோரப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(எ)

# விவசாய உற்பத்திகளின் விலையை ஒழுங்குபடுத்த தவறியது அரசாங்கம்

## கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம்

கொழும்பு, ஒக. 04

விவசாய உற்பத்திப் பொருட்களின் விலையை ஒழுங்குபடுத்துவதற்கான முறைமையை அரசாங்கம் தயாரிக்கத் தவறியதன் காரணமாகவே முட்டைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறானதொரு முறைமையை தயார் செய்யாமல் முட்டைகளை இறக்குமதி செய்வதன் ஊடாக உள்நாட்டு தொழில் அழிவை சந்திக்கும் என அந்தச் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர எச்சரித்தார்.

எனினும், வரும் பண்டிகைக் காலத்துக்கு முட்டை, கோழி இறைச்சிகள் தட்டுப்பாடின்றி வழங்க வாய்ப்பு உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
04.08.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இப்படி எத்தனையை பார்த்துவிட்டோம்

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வை காணப் போவதாக தெரிவித்திருக்கின்றார். தேர்தல் காலம் என்பதால், இனிவரும் நாட்களில், இது போன்ற பல கதைகளை அடிக்கடி கேட்கக் கூடியதாக இருக்கும். சில தினங்களுக்கு முன்னர், எம்.ஏ.சுமந்திரன் ரணில் விக்கிரமசிங்கை சந்தித்து கலந்துரையாடியதாகவும் செய்தியொன்று வெளியாகியிருந்தது. இதன்போது, ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமென்று, விக்கிரமசிங்க கூறினார் எனவும் செய்திகள் எழுதப்பட்டிருந்தது.

ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தியிருக்கலாம். ஆனால் அதனை திட்டமிட்டு பிற்போட்டிருந்தனர். மாகாண சபைத் தேர்தலை பிற்போட்டமைக்கு பின்னால், சம்பந்தன் - சுமந்திரனின் ஒத்துழைப்பும் இருந்திருந்தது. வர முடியாத அரசியல் யாப்பு ஒன்று, வருமென்று கூறி, ஐந்து வருடங்களை வீணாக்கியதுதான் அன்றைய சாதனையாக இருந்தது. இன்று அதே ரணில் விக்கிரமசிங்க மீண்டும் இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் பேசுகின்றார். தன்னை நம்புமாறு தமிழ் மக்களை கோருகின்றார்? அவர் உண்மையிலேயே இனப்பிரச்னையை தீர்க்க விரும்பினால் அது நல்ல விடயம். அதனை நாங்கள் வரவேற்கலாம். ஆனால் கடந்த கால அனுபவமோ தமிழ் மக்களை எச்சரிக்கின்றது - அதாவது, இது போன்ற எத்தனை தேர்தல் காலக் கதைகளை நாங்கள் கேட்டுவிட்டோம்? இனியும் கதை கேட்கும் சமூகமாக இருப்பதா அல்லது இது வரையான கதைகளுக்கு எதிர்வினையாற்றும் சமூகமாக இருப்பதா?

இந்தக் கேள்வியின் அடிப்படையில்தான், ஈழத் தமிழ் சமூகம், இந்த ஜனாதிபதி தேர்தலை கையாளவேண்டியிருக்கின்றது. தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் அனைவருமே, போட்டி போட்டுக் கொண்டு, தமிழ் மக்கள் மீதான கரிசனையை காண்பிக்கின் றனர். ஆனால் இதே வேட்பாளர்கள், குருந்தூர் மலை விவகாரத் தின்போது, வெடுக்குநாறி சிவன் ஆலய விவகாரத்தின் போது, தையிட்டி பிரச்னையின்போது எங்கிருந்தனர்? அப்போதெல்லாம், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஏன் செவி சாய்க்கவில்லை?

இலங்கை தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து தமிழ்த் தலைமைகள் காலத்துக்கு காலம், உடன்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள முயற்சித்திருக்கின்றனர். இந்த உடன்பாடுகளின் வரலாற்றை எடுத்து நோக்கினால், ஆரம்பத்தில், மிகவும் குறைவான கோரிக்கைகளைத்தான் தமிழ் தலைமைகள் முன்வைத்திருந்தனர். ஆனால் கொழும்பின் அதிகார நாற்காலியில் இருந்தவர்களோ, அந்தக் குறைவான கோரிக்கைகளைக் கூட கருத்தில் கொள்ளத் தயாராக இருக்கவில்லை. உடன்பாடுகளை கிழித்து வீசினர். இதன் விளைவாகவே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை வீரியம் கொண்டது. ஆயுதப் போராட்டமாக வளர்ச்சியுற்றது. யுத்தமாக மாறியது. இன்றைய, இலங்கைத் தீவு என்பது, ஒரு உள்நாட்டு யுத்தத்தின் சாட்சியாக இருக்கின்றது. ஆனால் இவ்வாறானதொரு சூழலில் கூட, அரசியலமைப்பில் உள்ளவற்றைக் கூட அமுல்படுத்துவதற்கு அதிக பஞ்சாயத்துக்களை செய்து கொண்டிருக்கும் நிலையிலேயே கொழும்பின் ஆட்சியாளர்கள் இருக்கின்றனர்.

இந்த அரசியல் பஞ்சாயத்தை தொடர்வதற்கு அல்லது பங்கு போடுதற்கான தேர்தல் போட்டிதான் தற்போது நடைபெறவுள்ளது. இது ஒரு நெருக்கடியான தேர்தல் களம் என்பதால் ஈழத் தமிழ் மக்களின் வாக்குகள் இன்றியமையாத நிலையிலேயே இருக்கின்றது. இதன் காரணமாகவே, தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் அனைவரும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை உச்சரிக்கின்றனர். இதனை நம்பி தமிழ் மக்கள் வாக்களிக்க முடியுமா? அவ்வாறு வாக்களிக்குமாறு தமிழ் தேசியக் கட்சிகள் கூற முடியுமா?

# சமய தலைவர்களிடம் ஆசி பெற்றார் ரணில்!

யாழ்ப்பாணம், ஓக. 04

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் நாக விகாரைக்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.


இதன்போது ஜனாதிபதிக்கு விசேட கௌரவிப்பு வழங்கப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளையும் நல்லை ஆதீனத்தில் சந்தித்து ஆசி பெற்றார்.

அத்துடன் யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடினார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் , இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள வசாவிளான் பிரதேசம் விடுவிப்பு, இன்டிகோ விமான சேவையை ஆரம்பித்தல், இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான கப்பல் சேவையை ஆரம்பித்தல் போன்ற பல விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (அ)



# இந்தியா - இலங்கை கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் மிகவிரைவில் கூட்டப்படும்!

சென்னை, ஓக. 04

இந்தியா-இலங்கை கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் விரைவில் கூட்டப்படுமென சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு எழுத்துபூர்வமாக தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் கைது செய்யப்படும் விவகாரம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை மாலை விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் நிகழ்வுகள் அடிக்கடி நடந்து வருவதாகவும், நேற்று முன் தினம் இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், அதனால் இந்தியா - இலங்கை கூட்டு நடவடிக்கை குழுவின் கூட்டத்தை விரைவில் கூட்ட வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாகவும் வாதிட்டார்.

அப்போது தமிழ்நாடு அரசு தரப்பில் ஆஜரான அரசு வழக்கறிஞர், மீனவர்கள் கைது சம்பவங்களை தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து மத்திய அரசு சார்பில் ஆஜரான துணை சொலிசிட்டர் ஜெனரல் ராஜேஷ் விவேகானந்தன், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்கள், மத்திய அரசின் நடவடிக்கையால் விடுவிக்கப்படுவதாகவும், மீனவர் பிரச்னைக்கு தீர்வு காண, இரு நாட்டு செயலாளர்கள் மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தியா - இலங்கை கூட்டு நடவடிக்கை குழு, விரைவில் கூட்டம் கூட்டி இதுசம்பந்தமாக விவாதிக்க உள்ளதாகவும் விளக்கமளித்தார்.

னைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், மத்திய அரசின் வாதத்தை பதிவு செய்து, வழக்கை முடித்து வைத்தனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் ஆயிரம்:
# நடைப்பயிற்சியினால் குறையும் முதுகு வலி!



முதுமையினால் மட்டுமின்றி பல காரணத்தாலும் சிலருக்கு முதுகு வலி ஏற்படுகிறது. அதற்கு மருந்தில்லா சிகிச்சை ஒன்றை அறிவியல் உலகம் கண்டு பிடித்து உள்ளது. மிகவும் சாதாரணமான நடைப்பயிற்சி முதுகுவலிக்கு பெரும் நன்மைகளைத் தருகிறது. இந்த ஆதாரப்பூர்வமான தகவலை மக்வாரி பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்து, ஜூன் 20, 2024 தேதி வெளியிட்டுள்ளனர். இது மிகவும் எளிமையான சிகிச்சையும், மிக மிக சந்தோஷமான செய்தியும் அல்லவா?

### முதுமையும் முதுகு வலியும்

குறைந்த முதுகுவலியுள்ள வரலாற்றைக் கொண்ட பெரியவர்கள் தவறாமல் தொடர்ந்து நடந்தால் முதுகு வலி மீண்டும் வராமல் கிட்டத்தட்ட இருமடங்கு நீண்டது என்று உலகின் முதல் ஆய்வு கண்டறிந்துள்ளது. உலகளவில் சுமார் 800 மில்லியன் மக்கள் குறைந்த முதுகுவலியைக் கொண்டுள்ளனர். மேலும் இது முதுமைக் கால இயலாமை மற்றும் வாழ்க்கைத் தரம் குறைவதற்கு முக்கிய காரணமாகும்.

குறைந்த முதுகுவலியின் தொடர்ச்சியானது மிகவும் பொதுவானவை, ஒருமுறை இந்த முதுகு வலியால் பாதிக்கப்பட்டால், மீண்டுவரும் 10 பேரில் ஏழு பேர் ஒரு வருடத்திற்குள் மீண்டும் அந்த பாதிப்பை அடைவார்கள்.

முதுகுவலி மேலாண்மை மற்றும் தடுப்புக்கான தற்போதைய சிறந்த நடைமுறை உடற்பயிற்சியை பரிந்துரைக்கிறது. இருப்பினும், சில வகையான உடற்பயிற்சிகள் அவற்றின் அதிக செலவு, சிக்கலான தன்மை மற்றும் மேற்பார்வையின் தேவை காரணமாக பலருக்கு அணுகக்கூடியதாகவோ அல்லது மலிவாகவோ இல்லை. மக்வாரி பல்கலைக்கழகத்தின் முதுகெலும்பு வலி ஆராய்ச்சி குழுவின் மருத்துவப் பரிசோதனையானது, நடைப்பயிற்சி ஒரு பயனுள்ள செலவற்ற மற்றும் எளிதில் அணுகக்கூடிய சிகிச்சை தலையீடாக இருக்குமா என்று சோதனை செய்து பார்த்தது.

குறைந்த முதுகுவலியால் பாதிக்கப்பட்ட சமீபத்தில் மீண்ட 701 பெரியவர்களை இந்த சோதனை பின்தொடர்ந்து ஆய்வு செய்தது. பங்கேற்பாளர்களை ஒரு தனிப்பட்ட நடைப்பயிற்சி திட்டம் மற்றும் ஆறு மாதங்களுக்கும் மேலாக ஆறு பிசியோதெரபிஸ்ட் வழிகாட்டுதல் கல்வி அமர்வுகளுக்கு ஒதுக்கியது.

ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்பாளர்களை ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் வரை அவர்களின் நடைப்பயிற்சியைப் பின்தொடர்ந்தனர், அவர்கள் எப்போது நடைப்பயிற்சி வழக்கத்தைக் கைக்கொண்டார்கள் என்பதைப் பொறுத்து, அதன் முடிவுகள் தி லான்செட்டின் என்ற மருத்துவப் பத்திரிகையின் சமீபத்திய பதிப்பில் வெளியிடப்பட்டுள்ளன.

ஆய்வறிக்கையின் மூத்த எழுத்தாளர், மெக்வாரி பல்கலைக்கழக பிசியோதெரபி பேராசிரியர் மார்க் ஹான்காக் இந்த கண்டுபிடிப்புகள் குறைந்த முதுகுவலி எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது என்றும், ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் கூறுகிறார். 'தலையீட்டுக் குழுவில் கட்டுப்பாட்டுக் குழுவுடன் ஒப்பிடும்போது வலியைக் கட்டுப்படுத்தும் செயல்பாடுகள் குறைவாக இருந்தன, மேலும் அவை மீண்டும் வருவதற்கு முன் நீண்ட சராசரி காலம், 112 நாள்களுடன் ஒப்பிடும்போது சராசரியாக 208 நாள்கள்" என்று பேராசிரியர் ஹான்காக் கூறுகிறார். 'நடைப்பயிற்சி என்பது புவியியல் இருப்பிடம், வயது அல்லது சமூக-பொருளாதார நிலையைப் பொருட்படுத்தாமல், ஏறக்குறைய எவரும் ஈடுபடக்கூடிய குறைந்த செலவில், பரவலாக அணுகக்கூடிய மற்றும் எளிமையான உடற்பயிற்சியாகும்.

'முதுகுவலியைத் தடுப்பதற்கு நடைப்பயிற்சி ஏன் மிகவும் நல்லது என்று எங்களுக்குத் தெரியவில்லை, ஆனால் இதில் மென்மையான இயக்கங்கள், முதுகெலும்பு கட்டமைப்புகள் மற்றும் தசைகளை வலுப்படுத்துதல், தளர்வு, மன அழுத்தத்தை நீக்குதல் ஆகியவை அடங்கும். நமது நல்ல எண்டோர்பின்கள் என்ற சந்தோஷ ஹார்மோன்களும் இதில் பங்கு வகிக்கின்றன. இதய ஆரோக்கியம், எலும்பு அடர்த்தி, ஆரோக்கியமான எடை மற்றும் மேம்பட்ட மன ஆரோக்கியம் உள்ளிட்ட பல ஆரோக்கியத்திற்கு நடைப்பயிற்சி பயன்படுகிறது என்றும் அவர் கூறுகிறார்.

முன்னணி எழுத்தாளர் மற்றும் ஆய்வாளர் டாக்டர் நடாஷா போகோவி கூறுகையில், பங்கேற்பாளர்களுக்கு நீண்ட வலி இல்லாத காலங்களை வழங்குவதுடன், இந்த திட்டம் மிகவும் செலவு குறைந்ததாக இருந்தது. "இது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியது மட்டுமல்லாமல், சுகாதாரத்தைப் பெறுவதற்கான அவர்களின் தேவையையும், வேலையை விட்டு வெளியேறும் நேரத்தையும் ஏறக்குறைய பாதியாகக் குறைத்தது,"

என்று அவர் கூறுகிறார். 'முன்னர் ஆராயப்பட்ட முதுகுவலியைத் தடுப்பதற்கான உடற்பயிற்சி அடிப்படையிலான தலையீடுகள் பொதுவாகக் குழு அடிப்படையிலானவை, நெருக்கமான மருத்துவ மேற்பார்வை மற்றும் விலையுயர்ந்த உபகரணங்கள் தேவைப்படுகின்றன. எனவே அவை பெரும்பான்மையான நோயாளிகளுக்கு மிகவும் குறைவாகவே அணுகப்படுகின்றன. 'இந்த பயனுள்ள மற்றும் அணுகக்கூடிய உடற்பயிற்சி -நடைப்பயிற்சி வழிமுறையானது மற்ற வகை உடற்பயிற்சிகளைக் காட்டிலும் மிகப்பெரிய அளவில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது என்பதை எங்கள் ஆய்வு காட்டுகிறது என்றார்.

## இந்தவார ராசிபலன் 04.08.2024 - 17.08.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 19
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : அஷ்டமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள். தந்தை வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படலாம். நல்ல நண்பர்களுடன் பழகுவது நன்மை அளிக்கும். இடைவிடாத பணியின் காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். புலால் உண்பவர்களுக்கு அஜீரண தொல்லைகள் எழலாம். எதிர்பாராத தனவரவுகள் ஏற்படும். புதிய வியாபார தொடர்புகள் மூலம் இலாபம் அதிகரிக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் விருந்தினர்களுடன் கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழ்வீர்கள். அரசு ஆதாயங்களால் தொழில் வழியில் முன்னேற்றம் ஏற்படும். இன்பப் பயணங்களால் சந்தோஷம் பெருகும். நண்பர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. பெரியவர்கள் நல்வார்த்தைகள் கேட்டு, ஞானம் பெறுவீர்கள். பயணங்களில் முன்பதிவுப் பிரச்சனைகள், வசதியற்ற நிலைகளால் இடையூறுகள் என அவதிப்பட நேரலாம். வணிகர்களுக்கு, தர்ணா, கடையடைப்பு போன்ற பிரச்சனைகளால் தொழிலில் தடைகள் ஏற்படலாம். வருமானம் குறையும் நிலை ஏற்படலாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் உயர் வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வீடு, மனை ஆகியவை வாங்கும் யோகம் ஏற்படும். . பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேறும். வீட்டில் மனைவியிடம் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். பக்திக் கதைகள் கேட்டல் மற்றும் ஆன்மிகவாதிகளின் தரிசனத்தால் மனம் அமைதி பெறும். சிலருக்குக் காரியத் தடைகள் ஏற்படலாம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உறவுகளுடன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஒற்றுமை ஓங்கும். தொழிலில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் அடைய புதிய யுக்திகளை கடைப்பிடிப்பீர்கள். எதிர்பாராத விருந்தினர் வருகையால் வீட்டில் கும்மாளமும், குஷியும் இருக்கும். செலவுக்கும் குறைவிருக்காது. அரசு வகையில் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைத்து வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இணைந்து பேரின்பம் அடைவர். லாபம் ஏற்படும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரத்தின் மத்தியில் உங்களுக்கு சிறப்பான பலன்கள் ஏற்படும். துவக்கத்தில் பண விஷயமான சிந்தனைகள் தலைதூக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு, காவல்துறையினர் வழி அச்சம் ஆகியவை ஏற்படலாம். திட்டமிடப்பட்ட பயணங்களில் முன்பதிவு கிடைக்காமல் தடைகள் ஏற்படலாம். பிறரின் உயர்வு கண்டு ஏற்படும் பொறாமை மற்றும் கோபங்களை தவிர்ப்பது நல்லது. சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வார உங்களுக்குத் தொழிலில் புதிய கொள்முதல் மூலம் அதிகமான வருவாய் பெருக்கம் ஏற்படும். புதிய வாகன யோகம் ஏற்படலாம். தீர்த்த யாத்திரையும், வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படும். வெகு நாட்களுக்குப் பிறகு வீட்டுக்கு வரும் விருந்தினருடன் சினிமா, டிராமா என செல்வதால் மனம் மகிழும். ஞானிகளின் அருளால் நல்லதே நடக்கும். தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படும். அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால், எதிர்பார்க்கும் பணி உயர்வுகள் எளிதாகக் கிடைக்கும். சிலருக்கு கடன் வாங்கும் நிலை ஏற்படலாம்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் திரைத்துறையில் இருப்பவர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். இதுநாள் வரையில் இழுபறியாக இருந்த வழக்குகள் பைசலாகும். முன் கோபத்தைக் குறைத்தால் வாழ்க்கையின் நல்ல முன்னேற்றங்களை எதிர் பார்க்கலாம். தாய்வழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம். வீடு வாங்கும் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பணவரவுகள் அதிகம் கிடைக்கும். இரவு நேரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் அனைத்துப் பணிகளும் சிறப்பாக நடக்கும். மனைவியின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். அரசுப் பணியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் அனுகூலமான பலன்கள் அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். மேல்மட்ட அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் பிரகாசமாக அமையும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். கல்வியில் தேர்ச்சி ஏற்படும். மொத்தத்தில் வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் குடும்பத்தில் சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தங்கள் தனி திறமைக்கு ஏற்ப பெயரும் புகழும் கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் கட்டுப்படுத்தி சேமிப்பை உயர்த்துவது நல்லது. பதறாத காரியம் சிதறாது முடியும் என்பதால், எந்த ஒரு காரியத்தையும் பதட்டமின்றி பொறுமையாக செய்தால் வெற்றி நிச்சயம். பெரியவர்கள் ஆசியால் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். ஆடம்பரச் செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பண முடை ஏற்பட வாய்ப்பு உண்டு. வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். தொழிலில் முழு வெற்றி அடைய அதிக முயற்சிகள் தேவைப்படும். நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். பணியில் முழுக் கவனம் செலுத்துங்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்கள் அசாத்தியத் திறமையால் சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். அரசு வேலைகளுக்கு மனு செய்தவர்கள் சாதகமான பதில்களை எதிர்பார்க்கலாம். நண்பர்கள் மற்றும் உறவுகளிடம் தர்க்கம் செய்யாதிருப்பது நல்லது. அடிக்கடி தேவையற்ற பயணங்களை மேற்கொள்ள நேரும். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தின் ஆசைகள் அனைத்தையும் நிறைவேற்றி அவர்களை மகிழ வைப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சாக்களின் தீர்மானம் ரணிலுக்கு பாதகமானதா? சாதகமானதா?



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு பிரதான வேட்பாளரும் ஜனாதிபதியாக தெரிவாவதற்கு தேவையான் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெறப்போவதில்லை என்பது நீண்ட்நாட்களாக இருந்துவரும் ஒரு பொதுவான அபிப்பிராயமாகும்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்ட பிறகு கடந்த சில நாட்களாக பல பத்திரிகைகள் முதற்சுற்றில் 50 சதவீத மான வாக்குகளை எந்தவொரு வேட்பாளரும் பெறத்தவறும் பட்சத்தில் ஜனாதிபதி ஒருவரை தெரிவுசெய்வதற்கு அடுத்தகட்ட வாக்கு எண்ணிக்கை எவ்வாறு நடத்தப்படும் என்பது குறித்து விபரங்களை வெளியிட்டுவருகின்றன.

அரசியலில் புதிய அணிசேருகை முயற்சிகள் பல மாதங்களுக்கு முன்னரே தொடங்கிவிட்டபோதிலும், தேர்தல் அறிவிப்பு வெளியானதை தொடர்ந்து அந்த முயற்சிகள் தற்போது தீவிரமடைந்திருக்கின்றன.

இலங்கை அரசியலில் முன்னென்றும் இல்லாத வகையில் எந்தவொரு அரசியல் கட்சியும் இன்று பலம்பொருந்திய நிலையில் இல்லை. கடந்த நூற்றாண்டில் மாறி மாறி ஆட்சிக்குவந்த இரு பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா சுதந்திர கட்சியும் மிகவும் பலவீனமடைந்து கருத்தில் எடுக்கமுடியாத அரசியல் சக்திகளாக மாறிவிட்டன.

சுதந்திர கட்சியைக் கைவிட்டு ராஜபக்சாக்கள் அமைத்த சிறிலங்கா பொதுஜன பெரமுன மிகவும் பலம் பொருந்திய கட்சியாக குறுகிய காலத்திற்குள் ஆட்சியதிகாரத்துக்கு வந்தபோதிலும், இரு வருடங்களுக்கு முன்னர் மூண்ட மக்கள் கிளர்ச்சியை தொடர்ந்து அந்த கட்சியும் செல்வாக்கை இழந்துவிட்டது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஒரு ஆசனத்தைக் கூட ஐக்கிய தேசிய கட்சியினால் வென்றெடுக்க முடியவில்லை. பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட்டிருக்காவிட்டால் சுதந்திர கட்சிக்கும் அதே கதியே ஏற்பட்டிருக்கும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முரண்பட்டுக்கொண்டு வெளியேறி சஜித் பிரேமதாச நான்கு வருடங்களுக்கு முன்னர் அமைத்த ஐக்கிய மக்கள் சக்தியிடமே ஐக்கிய தேசிய கட்சியின் வாக்கு வங்கி தற்போது இருக்கிறது.

மிகவும் குறைந்த வாக்கு வங்கியைக் கொண்டிருந்த ஜனதா விமுக்தி பெரமுன பல்வேறு அமைப்புக்களை அணிசேர்த்துக்கொண்டு அமைத்த தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் கிளர்ச்சிக்கு பின்னர் தென்னிலங்கையில் ஆதரவு பலமடங்கு பெருகியிருப்பதாக தோன்றுகின்ற போதிலும், இதுவரையில் அது தேர்தல் ஒன்றில் பரீட்சித்துப் பார்க்கப்படவில்லை.

அண்மையை கருத்துக்கணிப்புக்கள் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் பிரேமதாசவுமே மக்கள் ஆதரவில் முன்னிலையில் இருப்பதாக காண்பித்தன.

ஜனாதிபதி தேர்தல் அறிவிப்புக்கு பிறகு தீவிரமடைந்திருக்கும் அணிசேருகைகள், குறிப்பாக ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் கட்டுப்பாட்டையும் மீறி அணிதிரளுகின்ற பின்புலத்தில், பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் மக்கள் ஆதரவில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற கேள்வி எழுகிறது.

தனது கட்சியில் இருந்து தன்னை தூரவிலக்கிக்கொண்டு ஜனாதிபதி விக்கிரமசிங்க ஒரு சுயேச்சை வேட்பாளராகவே தேர்தலில் போட்டியிடுகிறார். இலங்கையில் இவ்வாறு இடம்பெறுவது இதுவே முதற்தடவை. தனது தேர்தல் பிரசாரங்களைக் கூட அவர் தனது கட்சியினரிடம் கையளிக்கக்கூடிய நிலையில் இல்லை. பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் அமைக்கப்படவிருப்பதாக கூறப்படும் பரந்த கூட்டணியை நம்பியே விக்கிரமசிங்க களத்தில் குதித்திருக்கிறார்.

அவருக்கு ஆதரவாக அணிதிரளும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ராஜபக்சாக்களின் செல்வாக்கு உச்சநிலையில் இருந்தபோது நான்கு வருடங்களுக்கு முன்னர் அவர்களின் கட்சியின் சார்பில் பாராளுமன்றத்துக்கு தெரிவானவர்கள். ராஜபக்சாக்களே செல்வாக்கிழந்துநிற்கும் நிலையில் இந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் மத்தியில் எந்தளவுக்கு செல்வாக்கு இருக்கமுடியும் என்பது இன்னொரு முக்கியமான கேள்வி. புதிய ஜனாதிபதியை பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்ல, நாட்டு மக்களே தெரிவு செய்யப்போகிறார்கள்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் தனது ஆசனத்தைக்கூட விக்கிரமசிங்கவினால் காப்பாற்ற முடியவில்லை. பல்வேறு கட்சிகளையும் சேர்ந்தவர்களை இணைத்துக் கொண்டு அமைக்கும் கூட்டணியினால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தேவையான 50 சதவீதமான வாக்குகளை அவருக்கு திரட்டிக் கொடுக்கமுடியுமா?

சுமார் அரை நூற்றாண்டு கால அரசியல் அனுபவத்தைக் கொண்டிருக்கின்ற போதிலும், விக்கிரமசிங்க கடந்த இரு வருடங்களில் நாட்டின் பொருளாதார மீட்சிக்காக தனது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மாத்திரமே தனது சாதனைகள் என்று கூறிக்கொண்டு மக்களிடம் செல்கிறார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு மாத்திரமே நெருக்கடியில் இருந்து இலங்கை விடுபடுவதற்கு ஒரே வழி என்பதை தவிர அவர் மக்களிடம் புதிதாக எதையும் கூறுவதாகவும் இல்லை. தேர்தலில் வெற்றிபெறுவதற்கு ஜனாதிபதி முற்றுமுழுதாக தனது பொருளாதாரக் கொள்கைகளில் மாத்திரமே தங்கியிருக்கிறார். அது அவரை மீண்டும் ஜனாதிபதி பதவிக்கு கொண்டுவரப் போதுமானதா? அவரது அரசாங்கம் மேற்கொண்ட பல நடவடிக்கைகளும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய சில சட்டங்களும் இலங்கை அரசியல் தலைவர்களில் கூடுதலான அளவுக்கு தாராளவாத ஜனநாயகப் போக்கைக் கொண்ட ஒருவர் என்று அவருக்கு ஏற்கெனவே இருந்த பெயரையும் இல்லாமல் செய்துவிட்டன.



தங்களை மீறி பொதுஜன பெரமுனவின் அமைச்சர்களினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஆதரவைப் பெறுவதற்கு ஜனாதிபதி எடுத்த முயற்சிகள் காரணமாக ராஜபக்சாக்கள் கோபமடைந்திருக்கிறார்கள். பொதுஜன பெரமுனவை பிளவுபடுத்துவதாக ஜனாதிபதி மீது அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

ராஜபக்சாக்களை கைவிட்டு பொதுஜன பெரமுன அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியுடன் அணிசேருவது அவருக்கு எந்தளவுக்கு அனுகூலமானதாக இருக்கும்? விக்கிரமசிங்கவை ஆதரிக்கப் போவதில்லை என்று ராஜபக்சாக்கள் எடுத்த தீர்மானம் அவருக்கு பாதகமானது அல்ல என்ற ஒரு அபிப்பிராயமும் இருக்கிறது. அவ்வாறானால், நாட்டை சீரழித்த அவர்களின் சகல கொள்கைகளையும் செயற்பாடுகளையும் ஆதரித்த அதே பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு விக்கிரமசிங்கவுக்கு எவ்வாறு நல்வாய்பாக அமையமுடியும்? இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் மக்களுக்கு இருக்கும் அபிப்பிராயம் தேர்தலில் விக்கிரமசிங்கவின் வாய்ப்புக்கள் மீது நிச்சயம் தாக்கத்தை செலுத்தும் எனலாம்.

ராஜபக்சாக்கள் தங்களுக்கு மக்கள் மத்தியில் இன்னமும் கூட பெரிய செல்வாக்கு இருப்பதாக காட்டிக்கொள்வதற்கு பொதுவெளியில் என்னதான் பேசினாலும், ஜனாதிபதி தேர்தலில் பெரும்பாலும் விக்கிரமசிங்கவையே அவர்கள் ஆதரிப்பார்கள் என்றே பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. தங்களது குடும்பத்தின் நலன்களையும் எதிர்கால அரசியல் வாய்ப்புக்களையும் உறுதிசெய்யக்கூடிய உத்தரவாதங்களை ஜனாதிபதியிடமிருந்து பெறுவதற்கு அவர்கள் எடுத்த முயற்சிகள் பயனளிக்காமல் போனதை அடுத்தே அவர்கள் தங்கள் கட்சியின் சார்பில் தனியான வேட்பாளரை களமிறக்குவதற்கு தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆனால், ஒரு ராஜபக்சவை வேட்பாளராக நிறுத்துவதற்கும் அவர்கள் தயாராக இல்லை. ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன போட்டியிடாவிட்டால் தங்களது வாக்குவங்கி சிதறிப்போய்விடும் என்றும் அதனால் பாராளுமன்ற தேர்தலில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும் அவர்கள் அஞ்சுகிறார்கள். தங்களது கட்சியின் எதிர்கால வாய்ப்புக்களை உறுதிசெய்வதற்கு அவர்கள் விசுவாசி ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பார்கள். அதற்கென்று ஏற்கெனவே ஒருவரை தெரிந்தெடுத்துவைத்திருக்கிறார்கள்.

ராஜபக்சாக்கள் நாட்டு நலன் உட்பட சகலவற்றுக்கும் மேலாக தங்களது சொந்த நலன்களுக்கு மாத்திரமே முன்னுரிமை கொடுக்கும் சுபாவம் கொண்டவர்கள். ஜனாதிபதி தேர்தல் ராஜபக்சாக்களைப் பற்றியும் அவர்களுடன் சேர்ந்து நின்றவர்களைப் பற்றியும் நாட்டு மக்கள் என்ன அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நிச்சயம் நிரூபிக்கும்.

பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானத்தை மாற்றியமைப்பதற்கு அதன் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் பிரதமர் தினேஷ் குணவர்தன பேச்சுவார்த்தை நடத்துவதாக கூறப்படுகிறது. அவரின் முயற்சி எந்தளவுக்கு வெற்றிபெறும் என்று தெரியவில்லை. ராஜபக்சாக்களிடம் இருந்து தூரவிலகுவது ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு அனுகூலமானது என்று பரவலாக நம்பப்படுகின்ற போதிலும், அவர் ராஜபக்சாக்கள் எடுத்த முடிவு ப்பற்றி கருத்து எதையும் பெரிதாகக் கூறுகிறார் இல்லை.

தங்களை மீறி பொதுஜன பெரமுனவின் அமைச்சர்களினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஆதரவைப் பெறுவதற்கு ஜனாதிபதி எடுத்த முயற்சிகள் காரணமாக ராஜபக்சாக்கள் கோபமடைந்திருக்கிறார்கள். பொதுஜன பெரமுனவை பிளவுபடுத்துவதாக ஜனாதிபதி மீது அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் எதிரணிக்கட்சிகளை பலவீனப்படுத்துவதற்கு முயற்சிப்பது ஒன்றும் அரசியலில் புதிய விடயம் அல்ல. ராஜபக்சாக்கள் தாங்கள் அதிகாரத்தில் இருந்த காலத்தில் எதிர்க்கட்சிகளை பிளவுபடுத்தும் வேலையை மிகவும் கச்சிதமாகச் செய்தார்கள். அதனால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட அரசியல் தலைவர் என்றால் அது விக்கிரமசிங்கவே. அவரது கட்சியின் இன்றைய பலவீனத்துக்கு அது ஒரு முக்கிய காரணம்.

இப்போது வரலாறு திரும்பியிருக்கிறது. தங்களுக்கு பாதிப்பு ஏற்படும்போது மாத்திரம் ராஜபக்சாக்கள் குமுறுகிறார்கள். சலூன் கதவு பற்றி மகிந்த ராஜபக்ச பேசியதை எவரும் மறந்திருக்கமாட்டார்களன. தனது கட்சியின் சார்பில் தன்னந்தனியனாக பாராளுமன்றத்தில் இருந்துகொண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வந்த விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக இப்போது பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் உட்பட 115 பேர் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு எடுத்த தீர்மானம் கடந்த வாரம் இடம்பெற்ற அரசியல் நிகழ்வுகளில் முக்கியமாக குறிப்பிட வேண்டிய ஒன்று. அதற்கு ஒரு பிரத்தியேக காரணம் இருக்கிறது.

பிரதமர் குணவர்தன ஜனாதிபதியுடன் பாலர் வகுப்பில் இருந்து ஒன்றாகக் கல்விபயின்ற ஒருவர். அவர்கள் இருவரும் நல்ல நண்பர்கள் என்றாலும் அரசியலில் இரு துருவங்கள். குணவர்தன தன்னையும் தனது கட்சியையும் எப்போதுமே ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிரான முகாமுடனேயே அடையாளப்படுத்தும் ஒரு அரசியல் பாரம்பரியத்தைக் கொண்டவர்.

விக்கிரமசிங்கவின் கொள்கைகளை ஒருபோதும் குணவர்தன ஏற்றுக்கொண்டதில்லை. அவர் இடதுசாரிக் கொள்கைகளும் சிங்கள தேசியவாதமும் கலந்த ஒரு போக்கைக் கடைப்பிடித்து வந்தவர். காலம் செய்த கோலம் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் அவர் பிரதமராக பதவி வகிக்கிறார். அது மாத்திரமல்ல, ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரங்கள் குணவர்தனவின் தலைமையிலேயே முன்னெடுக்கப்படவிருப்பதாக கூறப்படுகிறது.

பிரதமரின் தந்தையார் காலஞ்சென்ற பிலிப் குணவர்தன இலங்கைக்கு மார்க்சிசத்தை அறிமுகப்படுத்தியவர் என்று பெயரெடுத்தவர். அவர் தனது இறுதிக்காலத்தில் இடதுசாரி அரசியலுக்கு நேர் எதிரான கொள்கைகளைக் கொண்ட ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராக இருந்தார். அதேபோன்றே அவரின் புதல்வனும் தற்போதைய ஐக்கிய தேசிய கட்சி தலைவரின் அணியில் சங்கமமாகியிருக்கிறார். அரசியல் மாற்றங்கள் பல விசித்திரமான படுக்கைத் துணைகளை உருவாக்குகின்றன. அடுத்துவரும் நாட்களில் அத்தகைய மேலும் பல துணைகளை நாம் காணப்போகிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரணில் - சுமந்திரன் சந்திப்பும் தமிழர் பிரச்னைக்கு தீர்வும்?

கடந்த வாரம் மிக இரகசியமாக நடந்த ஒரு சந்திப்பு பற்றிய செய்திகள் தமிழ் ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், தமிழ் அரசு கட்சியின் பேச்சாளரான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனும் சந்தித்ததாகவும், அந்தச் சந்திப்பில் பல விடயங்கள் இணக்கம் காணப்பட்டதாகவும் வெளிவந்த செய்திகள் பலரையும் ஆச்சரியப்படுத்தியிருக்கலாம்.

முதலில் அந்தச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டதாக வெளிவந்த செய்திகளை பார்க்கவேண்டியது அவசியமானது என்பதால் அதனை அப்படியே கீழே தருகின்றோம்.

அதுபற்றி வந்த செய்தியின் சாராம்சம் இதுதான்:

தமிழ்த் தேசியப் பிரச்னைக்கு ஆக்கபூர்வமான தீர்வு காண்பதற்கான முன் ஆயத்தமாக சில நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.


இருவரும் பேசி இணக்கம் கண்ட ஏற்பாடுகளின்படி,

மாகாண சபைத் தேர்தல் சட்டமூலம் உடனடியாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து நிறைவேற்றப்படும். இது தொடர்பில் சுமந்திரன் தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பித்துத் தயாராக இருக்கும் சட்டமூலம் வரும் ஓகஸ்ட் 22, 23ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

சுமந்திரன் சமர்ப்பித்துள்ள தனிநபர் சட்டமூலம் ஏற்கனவே வர்த்தமானியில் பிரசரிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டு, நிறைவேற்றப்படுவதற்கு தயாரான நிலையில் உள்ளது. அந்தச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டி உள்ள சில திருத்தங்களுடன் அதனை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வந்து நிறைவேற்றினால் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

மாகாண சபைகளில் இளைஞர், யுவதிகளுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்குவதை உறுதிப்படுத்தல், எம்.பிக்களும் அப்பதவியில் இருந்து கொண்டே மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வகை செய்தல் ஆகிய திருத்தங்கள் இந்தச் சட்டமூலத்துக்குச் செய்யப்பட வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார். சட்டமூலத்தின் குழு நிலை விவாதத்தின்போது சட்டமா அதிபரின் இணக்கத்துடன் அந்த மாற்றங்களைக் கொண்டுவர முயற்சிக்கலாம் என சுமந்திரன் எம்.பி. கூறியமையை ஜனாதிபதி ரணில் ஏற்றுக்கொண்டார்.

தாம் சமர்ப்பித்துள்ள மாகாண சபைகள் தேர்தல் சட்டமூலத்தை வரும் 22, 23 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் எடுத்து விவாதிப்பதற்கு அதனை நாடாளுமன்ற நிகழ்ச்சிப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு தாம் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தை கடிதம் மூலம் கோரியுள்ளார் என்றும், அது இன்று நாடாளுமன்ற விவகாரங்களை ஆராயும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட



## என்ன நடக்கின்றது தமிழர் அரசியலில்?

**சுமந்திரனுக்கும், ஜனாதிபதிக்கு இடையே நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்திப்பு பற்றி இதுவரை எந்த சிங்கள ஊடகங்களிலும் ஒரு 'சிங்கிள் கொலம்' செய்திகூட வெளிவராதது எதற்காக?**

இருப்பதாகவும், அதற்கு அரசுத் தரப்பில் ஆதரவு கிட்டினால் விடயத்தை அந்தத் திகதியில் எடுத்து சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும் என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அதற்கான வழிகாட்டுதல்களை சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும், அரசு தரப்பின் பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்கவுக்கும் தாம் வழங்குவார் என ஜனாதிபதி உறுதியளித்தார்.

அதன் பிரகாரம் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு வழி செய்யும் சுமந்திரனின் தனிநபர் சட்ட மூலம் எதிர் வரும் 22, 23ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுமா என்பது குறித்து சபாநாயகர் தலைமையில் இன்று நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

13ஆம் திருத்தத்தில் இருக்கும் காணி அதிகாரப் பகிர்வை மாகாண சபைகள் உடனடியாக பிரயோகிப்பதற்குத் தேசிய காணி ஆணைக்குழு நிறுவப்பட வேண்டும். தேசிய காணி ஆணைக்குழுவுக்கான கட்டமைப்பு தயாராக இருப்பதாகவும், அது உடனடியாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்படுவதற்கு காலதாமதம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்திப்பின்போது உறுதி கூறினார். தேசிய காணி ஆணைக்குழு நிறுவப்பட்டு காணிகள் தொடர்பான தேசிய கொள்கைகள் வகுக்கப்பட்டால், காணிகள் நேரடியாக மாகாண நிர்வாகத்தின் கீழ் வந்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவும் உடனடியாக நிறுவப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மூலம் மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட பல அதிகாரங்கள் காலத்துக்குக் காலம் மீளப் பெறப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக மாகாணங்களுக்கு மீளப் பகிரும் ஏற்பாடுகள் எந்தத் தாமதமுமின்றி உடனடியாகவே மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் பொலிஸ் அதிகாரப் பகிர்வு உள்ளது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் எல்லாத் தரப்புகளுடனும் பேசி, இணக்கம் கண்டு, அதைச் சுமுகமாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி கூறினார்.

மேலே கூறப்பட்டவையே அந்தச் செய்தி.

முதலில் இந்தச் செய்தியைப் படித்ததும், ஒவ்வொரு தமிழருக்கும் ஏற்பட்டிருக்கவேண்டிய கேள்வி, இது என்ன தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்ட பின்னர் அவர்கள் இருவரும் தனியாகச் சந்தித்து இப்படியொரு முடிவை எடுக்க என்ன காரணம்?. இதை ஏன் இவர்கள் இருவரும் மட்டும் சந்தித்து முடிவெடுத்தனர்.

சந்திப்பு நடப்பதற்கு முன்னரே சுமந்திரன் எப்படி சில விடயங்களை முடிவெடுத்திருந்தார். உதாரணமாக, அந்தச் சந்திப்பிலேயே அவர், தாம் சமர்ப்பித்துள்ள மாகாண சபைகள் தேர்தல் சட்டமூலத்தை வரும் 22, 23 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் எடுத்து விவாதிப்பதற்கு அதனை நாடாளுமன்ற நிகழ்ச்சிப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு தாம் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தை கடிதம் மூலம் கோரியுள்ளார் என்று தெரிவித்தது எப்படி?

அவர் ரணிலை சந்திப்பதற்கு முன்னதாகவே கடிதத்தையும் அனுப்பிவிட்டு, அதற்கு பின்னரே ரணிலை சந்தித்திருக்கிறார் என்றால், இருவரும் முன்னதாகவே அதுகுறித்து பேசி இணக்கத்திற்கு வந்திருந்தனரா? அப்படியெனில் அது பற்றி இருவரும் எதற்காக இரகசியமாக அதனைச் செய்தனர்?

பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையான அமுல்படுத்துமாறு தமிழ் தேசியக் கட்சிகள் இந்தியப்பிரதமருக்கு கடிதம் எழுதியபோது, அந்தக் கடிதத்தில் சம்பந்தன் கையொப்பம் இடக்கூடாது என்று பிடிவாதமாக இருந்தவர் சுமந்திரன். பின்னர் ஒரு கட்டத்தில் அப்படி கடிதம் எழுதியதால்தான் இந்தியா நமது பிரச்சினையில் தீர்வாக பதின்மூன்றுடன் நிற்கின்றது, இல்லையெனில் அவர்கள் சமஷ்டித் தீர்வுக்கு ஆதரவளித்திருப்பார்கள் என்று சொன்னவர் சுமந்திரன். இப்போது யார் அனுமதியோடு பதின்மூன்றை அமுல்படுத்த ரணிலை சம்மதிக்க வைத்திருக்கிறார்.

இந்த திடீர் நகர்வுகள் பல கேள்விகளை எழுப்புகின்றன. அண்மைக்காலமாக சுமந்திரன், ஐக்கிய மக்கள் சக்தியின் ஆலோசகர் போல செயல்பட்ட ஒருவர். சஜித் பிரேமதாசாவின் வெற்றிக்காக அவர் தொடர்ந்து உழைத்து வருவதாக கூறப்பட்டது. அத்தகைய ஒருவர், தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், ரணில் விக்கிரமசிங்கவுடன் இப்படியொரு இரகசிய சந்திப்பை நடாத்தி, ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தியிருப்பதாக கூறப்படுவது, தெற்கில் ரணில் மீது அதிருப்தி அலையை ஏற்படுத்தும் உள்நோக்கம் கொண்டதா? என்று கேட்க வைத்திருக்கின்றது.

நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் மிக முக்கியமானவை என்று கூறப்படும் நிலையில், அவசரம் அவசரமாக இப்படியொரு சந்திப்பை நடாத்தி, மாகாண சபைகளை இயங்கச் செய்ய ரணில் முயற்சிசெய்கிறார் என்று காட்டுவதன்மூலம் தமிழ் மக்களின் வாக்குகளை பெறலாம் என்று சுமந்திரன் சிலவேளை ரணிலுக்கு யோசனை சொல்லியிருக்கலாம். ஆனால் அது தெற்கில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது ரணில் அறியாததல்ல. அதைவிட முக்கியமானது, சுமந்திரனோடு அரசியல் ரீதியாக உறவாடுவதும் முடிவெடுப்பதும் தமிழ் மக்கள் மத்தியில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் ரணில் அறியாதவர் அல்ல.

அதைவிட முக்கியமான கேள்வி ஒன்று எழுவதையும் இங்கே குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை. சுமந்திரனுக்கும், ஜனாதிபதிக்கு இடையே நடந்த இந்த வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த இந்தச் சந்திப்பு பற்றி இதுவரை எந்த சிங்கள ஊடகங்களிலும் ஒரு 'சிங்கிள் கொலம்' செய்திகூட வெளிவராதது எதற்காக?

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் பேரம்பேசுவதற்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும் என்று கூறிக்கொண்டிருந்த சுமந்திரன், பேரம்பேசத் தொடங்கியிருக்கிறார் என்றே தெரிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திர பாசத்துக்கும் மித்திர நேசத்துக்கும் நடுவில் தத்தளிக்கிறார் மகிந்த!

பனங்காட்டான்

# பிரிவையும் பிளவையும் ஆயுதமாக்கி வியூகம் வகுக்கிறார் ரணில்!





**மகனை அரியாசனம் ஏற்ற முயலும் மகிந்தாவால் ரணிலை பதவியிறக்க மனதார விருப்பமில்லை. இதனால் புத்திர பாசத்துக்கும், மித்திர நேசத்துக்கும் இடையில் அல்லாடுகிறார். ஆடும்வரை ஆட்டம் நடத்தி எல்லாத் தரப்பையும் பிளந்து ஜனாதிபதிக் கதிரையை தொடர்ந்து வைத்திருக்க முயலுகிறார் ரணில். இரண்டுக்கும் அப்பால், தங்களின் பொதுவேட்பாளரை நிறுத்துவதில் முனைப்பாக நகர்கிறது தமிழர்தேச அரசியல்.**

1982லிருந்து 2019ம் ஆண்டு வரையான 37 வருடங்களில் இலங்கை எட்டு ஜனாதிபதித் தேர்தல்களை சந்தித்துள்ளது. ஆனால், இந்த வருடம் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் தேர்தலைப் போன்ற இழுபறிகள், கட்சித் தாவல்கள், கழுத்தறுப்புகள் போன்று இதுவரை எந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இடம்பெறவில்லை.

தேர்தல் ஆணையக அறிவித்தலின் பிரகாரம் வேட்பாளர் மனுத்தாக்கலுக்கு பத்து நாட்கள் உள்ளன. தேர்தல் நடைபெறுவதற்கு நாற்பது நாட்கள் உள்ளன. இதற்கிடையில் என்ன நடைபெறுமென்று நினைக்க முடியாத வகையில் பல்வேறு அரசியல் பிரமுகர்களும் தங்கள் சந்தேகங்களை வெளியிட்டு வருகின்றனர்.

மேற்கு நாடுகளில் இருவர் சட்டபூர்வமாக திருமணம் புரியாமல் கூடி வாழ்வது (Living together) போன்று அரசியல் பிழைப்பு நடத்திய ரணில் தரப்பும் மகிந்த அணியும் பிளவுபட்டு நிற்கின்றன. ஆனால், மகிந்தவும் ரணிலும் இரவு வேளைகளில் மூடிய அறைக்குள் தனியாக சந்தித்து உரையாடி வருவதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நிலைமையை உன்னிப்பாகப் பார்க்கின், புத்திர பாசத்துக்கும் மித்திர நேசத்துக்குமிடையில் மகிந்த தத்தளிப்பது போலத் தெரிகிறது. 1990களின் ஆரம்பத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு அவரது ஏக புதல்வர் அனுர பண்டாரநாயக்க அரசியல் ரீதியாகக் கொடுத்த நெருக்கடிக்கு ஒத்ததாக மகிந்தவின் நிலைமையைச் சொல்லலாம்.

விடுதலைப் புலிகளை பிளவுபடுத்தியதுபோல பொதுஜன பெரமுனவையும் ரணில் பிளவுபடுத்துகிறார் என்று நாமல் பொதுவெளியில் தெரிவித்தபோதே, ரணிலுக்கான ஆதரவை பெரமுன வழங்குவதற்கு அவர் விரும்பவில்லையென்பது தெரியவந்தது. பெரமுனவை தங்களின் குடும்பக் கட்சியாகப் பார்த்து, தமது கதிரைக் கனவை வளர்த்துக் கொண்டிருப்பவர் நாமல். இது மகிந்தவுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், இப்போது மகனுக்கு அந்தப் பக்குவம் வரவில்லையாதலால் இன்னொரு தவணையை ரணிலுக்கு வழங்கி அந்த ஆதரவுத் தளத்தில் நாமலை அதற்கடுத்த தேர்தலில் வெற்றிபெறச் செய்யலாமென்பது மகிந்தவின் கணிப்பு.

ஆனால், நாமலுக்கு அதுவரை காத்திருக்கும் பொறுமை இல்லை. சிறிமாவோவின் விருப்பத்துக்கு எதிராக அளவுக்கு மீறிய அனுர பண்டாரநாயக்க கடைசியாக பிரதமர் பதவிகூட கிடையாது போன வரலாறை நாமல் புரிந்து கொள்வாரானால் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வாய்ப்புண்டு.

பொதுஜன பெரமுன பகிரங்கமாக தம்மை ஆதரிப்பதை ரணில் விரும்பவில்லையென்பது இன்னொரு பக்க விடயம். போர் வெற்றியாளர்கள் என்ற முகத்துடன் இருப்பவர்களின் ஆதரவு தமக்கு பகிரங்கமாகக் கிடைக்குமானால் சிறுபான்மை மக்களின் - முக்கியமாக தமிழரின் வாக்குகள் தமக்குக் கிடைக்காது என்பது அவருக்குத் தெரியும். அதனால் பெரமுனவை பிளவுபடுத்தி, தம்மை சுயாதீன வேட்பாளராக நிறுத்தி அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவைப் பெறுவதே ரணிலின் மூல இலக்கு.

இந்தப் பாதையில் அவர் இதுவரை வெற்றிநடை போடுவதாக கருதப்படுகிறது. பெரமுன தனியாக ஒரு வேட்பாளரை நிறுத்துவதென்ற முடிவெடுத்ததாக அறிவிக்கப்பட்ட அதே இரவு, பெரமுனவின் 92 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலைச் சந்தித்து தமது ஆதரவை பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளனர். மைத்திரிபால சிறிசேன மகிந்தவுடன் அப்பம் சாப்பிட்ட மறுநாள் ரணில் அணியுடன் இணைந்து ஜனாதிபதியான கதை போன்றது இது. ரணிலை ஆதரிக்கும் பெரமுனகாரர்களில் பெரும்பாலானவர்கள் அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள், வருங்காலத்தில் இப்பதவிகளை எதிர்பார்த்திருப்பவர்கள்.

கட்சியின் முடிவை மீறுபவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென அதன் செயலாளர் சாகல ரட்ணநாயக்க அறிவிக்க, உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்கும் நோக்கமில்லை, அடுத்து வரவுள்ள பொதுத்தேர்தலிலேயே நாம் நாட்டமாக உள்ளோம் என நாமல் தெரிவித்திருப்பது அவர்கள் தரப்பிலுள்ள பலவீனத்தையே புட்டுக்காட்டுகிறது.

இதனையே தமக்கான சாதகமாக்கிக் கொண்டிருக்கிறார் ரணில். தாம் தலைவராக இருக்கும் ஐக்கிய தேசிய கட்சி சார்பிலோ, தம்மை ஆதரித்து வந்த பெரமுன சார்பிலோ போட்டியிடவில்லை எனக் கூறிக் கொண்டு, எங்கிருந்தும் எவரும் வரலாமென அழைத்துக் கொண்டிருப்பதே ரணிலின் இன்றைய வியூகம்.

திடீரென இவருக்கு அதிர்ஸ்டம் அடித்ததுபோல் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவின் எம்.ஈ.பி. கட்சியின் ஆதரவு கிடைத்துள்ளது. ரணிலுடனான பேச்சுவார்த்தையின்போது பிரதமர் பதவியை நாமலுக்கு வழங்க வேண்டுமென மகிந்த தரப்பால் கேட்கப்பட்டது. அதனை உடனடியாகவே ரணில் நிராகரித்துவிட்டார். [illegible] ராஜபக்சக்கள் எடுத்த நடவடிக்கை காரணமாகவே ரணிலை ஆதரிக்கும் முடிவுக்கு தினேஸ் குணவர்த்தன வந்தாரென கூறப்படுகிறது.

ரணிலும் தினேஸ் குணவர்த்தனவும் 1949 மார்ச் மாதத்தில் பிறந்தவர்கள். இருவரும் றோயல் கல்லூரியில் ஒரே வகுப்பில் கல்வி கற்று இணைபிரியாத் தோழர்களாக இருந்து வருபவர்கள். இதன் அடிப்படையிலேயே முதன்முதலாக தினேஸை பிரதமர் பதவிக்கு ரணில் 2022ல் நியமித்தார் என்பதும், இதன் தொடர்ச்சியாகவே ரணிலுக்கான ஆதரவை தினேஸ் வெளியிட்டுள்ளார் என்பதையும் மற்றைய அரசியல்வாதிகள் குறிப்பிட்டு வருகின்றனர்.

இத்தேர்தலில் ரணில், சஜித், அனுர குமார ஆகிய மூவருமே பிரதான வேட்பாளர்கள். பெரமுனவும் ஒருவரை இறக்குமானால் நான்முனைப் போட்டியாகலாம். இந்தப் பின்னணியில் இவர்கள் எவருமே முதற்சுற்றில் ஐம்பது வீத வாக்குகளைப் பெறும் சாத்தியமில்லை. ஆறில் ஐந்து பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுத் தளத்தைக் கொண்டிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1982ல் இடம்பெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் 52.91 வீத வாக்குகளையே பெற முடிந்தது. அடுத்த ஜனாதிபதியான ரணசிங்க பிரேமதாச 1988 தேர்தலில் 50.43 வீத வாக்குகளையே பெற்றார்.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல்களில் ஆகக்கூடிய வாக்குகளாக 62.28 வீத வாக்குகளை 1994ல் பெற்ற சந்திரிகா குமாரதுங்க, 1999 தேர்தலில் 51.12 வீத வாக்குகளையே பெற்றார். இறுதியாக 2019ல் இடம்பெற்ற தேர்தலில் 69 லட்சம் சிங்கள வாக்குகளைப் பெற்றவரென அறைகூவிய கோதபாய ராஜபக்சவுக்கு 52.25 வீத வாக்குகளே கிடைத்தன.

இதனை ஓர் அளவுகோலாக வைத்துப் பார்க்கின் வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் எவருமே முதற்சுற்றில் ஐம்பது வீத வாக்குகளைப் பெறும் வாய்ப்பில்லை. இதனால், பின்தங்கிய வேட்பாளர்களின் இரண்டாம் மூன்றாம் விருப்பு வாக்குகள் எண்ணப்பட வேண்டிய தேவை ஏற்படும். அவ்வேளையிலும் ஐம்பது வீத வாக்குகளுக்கு நிச்சயமில்லை.

இதனை தமிழர் தரப்பு சரியாகப் புரிந்து கொள்ளுமானால் தமிழ் பொது வேட்பாளர் அவசியமென்பதை ஏற்றுக் கொள்ளும். இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தள்ளி வீழ்த்தப்பட்ட ரணில் 19 வருடங்களின் பின்னர் மீண்டும் களத்தில் இறங்கியுள்ளார். கடைசியாக இடம்பெற்ற மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் முறையே சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாச ஆகியோருக்கு தமிழர்கள் வாக்களித்தது இவர்கள் வெல்ல வேண்டுமென்பதற்காக அல்ல. ராஜபக்சக்களை தோற்கடிக்க வேண்டுமென்பதற்காகவே.

இன்றுள்ள கள நிலைவரம் முற்றிலும் வேறானது. சிங்களவர் ஒருவர் வெல்வதை தமிழ் வாக்குகளால் தோற்கடிக்க முடியாது. ஆனால், தமிழ் வாக்குகள் ஒருங்கிணைந்து தமிழ் பொதுவேட்பாளருக்கு அளிக்கப்படுமாயின், வெற்றி பெறும் சிங்கள ஜனாதிபதி ஐம்பது வீத வாக்குகளைப் பெறுவது கடினமாக இருக்கும். அவ்வாறான ஒரு நிலைமையை ஏற்படுத்துவதே பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கான அடிப்படைக் குறி.

தமிழ்ப் பொதுவேட்பாளர் வெற்றி பெறுவதற்காக போட்டியிடவில்லை. தமிழர்களின் அரசியல் அபிலாசைகளையும் அரசியல் பலத்தையும் சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்ட இந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்த வேண்டுமஎன்பதே இதன் முக்கிய அம்சம்.

விளங்கும் வகையில் சொல்வதானால் - 1977 பெதுத்தேர்தலில் தமிழர் தேசம் ஒன்றுபட்டு ஒரே குரலில் நின்று ஆகக் கூடியதாக 22 ஆசனங்களை நாடாளுமன்றத்தில் பெற்றதை நினைவிற்கொள்வது சாலச்சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா-அமெரிக்கா கைதிகள் பரிமாற்ற ரகசியப் பேச்சுவார்த்தையின் வெற்றி!

**கரேத் எவன்ஸ்**

ரஷ்யாவிற்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே பல வருடங்களாக நடந்து கொண்டிருந்த கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் பற்றிய ரகசிய பேச்சுவார்த்தைகள் ஒரு மைல்கல்லை அடைந்துள்ளன. வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 2), ரஷ்யாவில் இருந்து விடுவிக்கப்பட்ட மூன்று அமெரிக்கக் கைதிகள் அமெரிக்கா திரும்பியுள்ளனர். அவர்களை அதிபர் பைடனும், துணை அதிபர் கமலா ஹாரிஸூம் வரவேற்றனர்.

அதேபோல் வெவ்வேறு நாடுகளின் சிறைகளில் இருந்த 10 ரஷ்யக் கைதிகள் ரஷ்யா திரும்பியுள்ளனர். ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின் அவர்களை மாஸ்கோ விமான நிலையத்தில் வரவேற்றார்.

கடந்த வியாழன் அன்று (ஆகஸ்ட் 1) ஒரு ரஷ்யக் கொலையாளியும் ஒரு அமெரிக்க ஊடக நிருபரும் விடுதலை செய்யப்பட்டு துருக்கியில் தனித்தனி விமானங்களில் ஏற்றப்பட்டது கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் மைல் கல்லாகப் பார்க்கப்படுகிறது.

22 கைதிகளை உள்ளடக்கிய இந்தச் செயல்முறைக்கான பேச்சுவார்த்தை 2022-இல் துவங்கப்பட்டது. ரஷ்யா, அமெரிக்கா மற்றும் நான்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இடையேயான இந்தப் பேச்சுவார்த்தை திரைக்குப் பின்னால் ரகசியமாக மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தைச் செயல்படுத்த சம்பந்தப்பட்ட நாடுகள் தீவிரம் காட்டியதையடுத்து, விவகாரம் வெளியே கசியத் துவங்கியது. சமீப வாரங்களில் இந்தச் செயல்முறைகள் தீவிரமடைந்து, ஒப்பந்தம் அனைத்து தரப்பினரின் பார்வைக்கும் வந்தது.

பேச்சுவார்த்தைகள் சில சமயங்களில் சிக்கலான தருணங்களைக் கொண்டிருந்தன. உக்ரேன் போரில் அமெரிக்கா-ரஷ்யா இடையே பதற்றங்கள் அதிகரித்தபோது சிக்கல்கள் எழுந்தன.

### அமெரிக்கா-ரஷ்யா-ஜெர்மனி இடையே நடந்த பேச்சுவார்த்தை

'இது பல மாதங்களாகப் பல சுற்றுகளாக மேற்கொள்ளப்பட்ட சிக்கலான பேச்சுவார்த்தைகளின் விளைவாக நிகழ்ந்தது," என்று இந்த ஒப்பந்தத்தில் முக்கியப் பங்கு வகித்த அமெரிக்க தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் கைதிகள் பரிமாற்றத்திற்குப் பிறகு கூறினார்.

அமெரிக்க வெள்ளை மாளிகையின் மூத்த அதிகாரிகள் வியாழன் அன்று சி.பி.எஸ் உட்பட செய்தியாளர்களுடனான உரையாடலில் கைதிகள் பரிமாற்ற நிகழ்வுகளின் விரிவான காலவரிசையை விவரித்தனர்.

2022-ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தின் போது ரஷ்யா, கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தை முன்னெடுத்ததாக முதல் குறிப்பு வந்தது என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

அமெரிக்கக் கூடைப்பந்து நட்சத்திரமான பிரிட்னி கிரைனர், 2022-இல் கஞ்சா எண்ணெய் வைத்திருந்ததாக குற்றம்சாட்டப்பட்டு ரஷ்யாவில் சிறையில் அடைக்கப்பட்டார். அவரை விடுவிக்க அமெரிக்காவும் ரஷ்யாவும் பேச்சுவார்த்தை நடத்தின.

அந்த ஆண்டின் பிற்பகுதியில், பிரபல ரஷ்ய ஆயுத வியாபாரி விக்டர் பௌட் என்பவரை அமெரிக்கா விடுவித்து, அதற்கு இணையான உயர்மட்ட பரிமாற்றத்தில் கிரைனர் விடுவிக்கப்பட்டார்.

ஆனால் அந்த உரையாடல்களின் போது, ரஷ்யாவின் நேரடி உத்தரவின் பேரில் பிஸியான பெர்லின் பூங்காவில் ஒரு நபரைச் சுட்டுக் கொன்ற குற்றத்திற்காக ஜெர்மனியில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் வாடிம் கிராசிகோவ் என்ற கொலைக் குற்றவாளியை விடுவிக்க ரஷ்யா விரும்பியதாகவும் வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிராசிகோவின் விடுதலைக்கு ரஷ்யா அழுத்தம் கொடுப்பதாக சல்லிவன் தனது ஜெர்மன் கூட்டாளரிடம் தெரிவித்தார். மேலும், அப்போது ரஷ்யாவில் சிறையில் வைக்கப்பட்டிருந்த எதிர்கட்சித் தலைவரும், புடினின் வெளிப்படையான விமர்சகருமான அலெக்ஸி நவல்னிக்கு பதில் ஜெர்மனி அவரை விடுவிப்பது பற்றி யோசிக்குமா என்பதையும் விசாரித்தார்.

### அமெரிக்கப் பத்திரிகையாளரின் கைது

ஆனால், ஜெர்மனி தனது சொந்த மண்ணில் இவ்வளவு கொடூரமான கொலை செய்த ஒரு கொலைகாரரை விடுவிக்கத் தயங்கியது.

ஜெர்மனியிடம் இருந்து சல்லிவன் உறுதியான பதிலைப் பெறவில்லை. ஆனாலும், 2022-இல் அமெரிக்கா மற்றும் ரஷ்யா மற்றும் அமெரிக்கா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு இடையேயான ஆரம்ப உரையாடல்கள், சமீபத்திய வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட பெரிய, மிகவும் சிக்கலான பரிமாற்ற ஒப்பந்தத்திற்கு வழி வகுக்க உதவியது. இரு தரப்பும் தங்களின் விருப்பங்களை ஓரளவுக்கு சமிக்ஞை செய்து கொண்டன. ரஷ்யாவைப்





பொறுத்தவரை, கிராசிகோவ் தேவை என்பதை அமெரிக்காவுக்குத் தெளிவுபடுத்தியது.

அதே சமயம், அமெரிக்கா நவல்னியின் விடுதலையை மட்டுமின்றி, 2018-இல் ரஷ்யாவில் உளவு பார்த்த குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்ட முன்னாள் கடற்படை வீரர் பால் வீலனின் விடுதலையையும் விரும்பியது.

சாத்தியமான பரிமாற்ற ஒப்பந்தத்தின் ஆரம்பக் கட்ட முயற்சிகள் பின்னர் வடிவம் பெறத் தொடங்கின. ஆனால் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருந்தது.

2023-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பிற்பகுதியில், நியூ ஜெர்சியைச் சேர்ந்த 31 வயதான 'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' நிருபர் ஒரு செய்தி சேகரிப்பு பயணத்தில் இருந்தபோது ரஷ்ய உளவுத்துறை முகவர்களால் கைது செய்யப்பட்டார். அவரது கைது அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளிடமிருந்து கண்டன அலைகளை எழுப்பியது.

கைதுக்கு அடுத்த நாளே அதிபர் பைடன் சல்லிவனையும், வீலனையும் விடுதலை செய்து அழைத்து வரும் செயல்முறையை இணைத்து ஒரே ஒப்பந்தமாகச் செயல்படுத்துமாறு அறிவுறுத்தினார்.

### ரஷ்யாவை நேரடியாகத் தொடர்புகொண்ட அமெரிக்கா

அமெரிக்கா நேரடியாக ரஷ்யாவை தொடர்பு கொண்டது. பேச்சுவார்த்தைகள் இருதரப்பின் ஒப்புதலுடன் தொடங்கியது, வெள்ளை மாளிகை அதிகாரிகள், அந்தந்த வெளியுறவு அமைச்சர்களுடன் தொலைபேசியில் உரையாடினர். ஆனால் உரையாடல்கள் இந்த உயர் மட்ட வெளியுறவுத் தூதர்களிடமிருந்து ரகசிய உளவுத்துறை சேவை அதிகாரிகள் வசம் நகர்ந்தது. கெர்ஷ்கோவிச் உளவு பார்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்டதால் அமெரிக்கா இந்த விவகாரத்தில் மத்தியப் புலனாய்வு முகமையைச் சம்பந்தப்படுத்த தயங்கியது. புலனாய்வு அதிகாரிகளால் இந்த விவகாரம் வேறு கோணத்தை அடையும் என்று அஞ்சியது.

இந்த பதட்டமான பேச்சுவார்த்தைகள் 2023-இன் பிற்பகுதியில் தொடர்ந்த போது, அமெரிக்கா எதிர்பார்க்கும் எந்த ஒப்பந்தத்திற்கும் கிராசிகோவின் விடுதலை முக்கியமானது என்பதை அது புரிந்து கொண்டது என்று மூத்த வெள்ளை மாளிகை அதிகாரிகள் விவரித்தனர்.

58 வயதான கொலையாளி கிராசிகோவின் விடுதலையைத் தவிர்த்துப் பிற சலுகைகள் ரஷ்யாவிற்கு வழங்கப்பட்டன. அவர்களது கோரிக்கைகள் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டன.

இதில் கவனிக்க வேண்டிய மற்றொரு முக்கியமான விஷயம், கிராசிகோவ் ஜெர்மனியில் சிறையில் இருந்தார். அமெரிக்காவில் அல்ல, அவரை ஒருதலைப்பட்சமாக விடுவிக்க அமெரிக்காவுக்கு அதிகாரம் இல்லை என்பதே உண்மை.

கிராசிகோவை விடுதலை செய்வதற்கும், இந்த ஒப்பந்தத்திற்கான ரஷ்யாவின் முக்கிய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கும் ஜெர்மன் பிரதிநிதியைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் சல்லிவன் 2023-இன் பிற்பகுதியிலும், ஜனவரி 2024-இன் தொடக்கத்திலும் கிட்டத்தட்ட வாரந்தோறும் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ரஷ்யாவுடனான கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் வெற்றி ஜெர்மனி கிராசிகோவை விடுவிப்பதைச் சார்ந்துள்ளது என்று வெள்ளை மாளிகை அதிகாரிகள் விளக்கினர்.

### ரஷ்யாவின் நிலைப்பாடும் அமெரிக்காவின் தீவிர முயற்சியும்

உளவு பார்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட அமெரிக்கர்களுக்கு ஈடாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த ரஷ்ய உளவாளிகள் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்பதே ரஷ்யாவின் நிலைப்பாடாக இருந்தது. அமெரிக்கா இதைக் கருத்தில் கொண்டு, கணிசமான தீர்வைப் பெறும் நம்பிக்கையில் அதன் நட்பு நாடுகளால் சிறைபிடிக்கப்பட்ட முக்கிய ரஷ்ய உளவாளிகளைக் கண்டறிய முயன்றது.

வால் ஸ்ட்ரீட் ஜர்னல் சஞ்சிகையின் கூற்றுபடி, அமெரிக்க அதிகாரிகள், வெளியுறவு தூதர்கள் மற்றும் புலனாய்வு ஊழியர்கள் உலகம் முழுவதும் பயணம் செய்தனர். நட்பு நாடுகள் ரஷ்ய உளவாளிகளை சிறையில் வைத்துள்ளனவா என்பதை அறிய முயன்றனர். அமெரிக்காவின் இந்தத் தீவிர முயற்சியின் விளைவாகதான் தற்போது அதன் நட்பு நாடுகள் ரஷ்ய உளவாளிகளை விடுதலை செய்துள்ளனர்.

வியாழன் அன்று (ஆகஸ்ட் 1) போலந்து, ஸ்லோவேனியா மற்றும் நோர்வே சிறைகளில் இருந்து ரஷ்யர்கள் விடுவிக்கப்பட்டது அமெரிக்க அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சியின் வெற்றியின் அடையாளம்.

இந்த ஆண்டு பிப்ரவரியில், ஜெர்மன் அதிபர் ஓலாஃப் ஷால்ஸ், வெள்ளை மாளிகையில் அதிபர் பைடனைச் சந்தித்தார்.

### தோல்வி அடைந்த ஒப்பந்தம்

வியாழன் அன்று வெள்ளை மாளிகை அதிகாரிகள் வழங்கிய பட்டியலின்படி, கிராசிகோவ், நவல்னி, வீலன், கெர்ஷ்கோவிச் ஆகிய அனைத்து முக்கிய நபர்களையும் உள்ளடக்கிய கைதிகள் பரிமாற்றத்திற்கான கோரிக்கைகளைப் பற்றி அவர்கள் விவாதித்தனர்.

ரஷ்யாவிடமிருந்தும் நேர்மறையான சமிக்ஞைகள் வந்தன. பிப்ரவரி மாதத்தின் துவக்கத்தில் முன்னாள் ஃபாக்ஸ் நியூஸ் தொகுப்பாளர் டக்கர் கார்ல்சனுடன் ஒரு நேர்காணலில், விளாடிமிர் புடின் சிறையில் இருந்த கெர்ஷ்கோவிச்சைப் பற்றி பேசினார்.

'கெர்ஷ்கோவிச் தனது தாய்நாட்டிற்கு திரும்பலாம். நான் அதை எதிர்க்க மாட்டேன்," என்று கூறினார்.

பிபிசி-யின் ரஷ்ய சேவை ஆசிரியர் ஸ்டீவ் ரோசன்பெர்க் குறிப்பிட்டது போல், இது மிகவும் வெளிப்படையான குறிப்பு: 'ரஷ்யா ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ள தயார் நிலையில் இருக்கிறது," என்றார்.

புடினின் அந்த நேர்காணலுக்குச் சில நாட்களுக்குப் பிறகு அமெரிக்க அதிபர் பைடன் மற்றும் ஜெர்மன் அதிபர் ஓலாஃப் ஆகியோருக்கு இடையிலான வெள்ளை மாளிகை சந்திப்பு நிகழ்ந்தது.

அதன் பிறகு ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தைகள் 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி 16-ஆம் தேதி, அன்று தோல்வி அடைந்தது.

### நவல்னியின் மரணம்

கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கக்கூடிய கைதி, அலெக்ஸி நவல்னி, 47 வயதில் சைபீரிய சிறைச்சாலையில் இறந்தார். அவரது மரணத்திற்கு ஆதரவாளர்கள் மற்றும் உறவினர்கள் மற்றும் பல வெளிநாட்டு தலைவர்கள் புடின் மீது குற்றம் சாட்டினர். அவர் இயற்கை எய்தினார் என்று ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவரது மரணத்தின் போது ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் பற்றி எந்தத் தகவலும் வெளிவரவில்லை என்றாலும், நவல்னியின் சக ஊழியர் மரியா பெவ்சிக், கிராசிகோவுக்கு ஈடாக அவரை விடுவிக்க அதிகாரிகள் தயாராக இருந்தனர் என்று பகிரங்கமாகக் கூறினார்.

அந்த நேரத்தில் அவரது கூற்றுக்களை சுயாதீனமாக சரிபார்க்க முடியவில்லை. இதற்கிடையில், ரஷ்யா சாத்தியமான உடன்பாடு எட்டப்படவில்லை என்று அதனை பகிரங்கமாக மறுத்தது.

ஆனால் வியாழன் அன்று (ஆகஸ்ட் 1), வெள்ளை மாளிகை நவல்னியை ஒப்பந்தத்தில் சேர்ப்பதற்காக நிகழ்ந்த முயற்சியை உறுதிப்படுத்தியது, இறுதியில் எதிர்க்கட்சி நபருடன் பணியாற்றிய மூன்று பேர் ரஷ்ய காவலில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

'எங்களுடன் இருந்த தன்னம்பிக்கை எங்களை விட்டு போனது போல உணர்ந்தோம்," என்று நவல்னியின் மரணத்தின் தாக்கத்தை விவரிக்கும் போது சல்லிவன் உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார். நவல்னியின் மரணம் அறிவிக்கப்பட்ட நாளில் கெர்ஷ்கோவிச்சின் தாயும் தந்தையும் வெள்ளை மாளிகையில் சல்லிவனை சந்தித்தனர்.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யதீந்திரா

# தமிழரசு கட்சி என்ன செய்யப் போகின்றது?





ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான முயற்சி அதன் இறுதி கட்டத்தை எட்டியிருக்கின்றது. தமிழ் மக்கள் பொதுச் சபையும் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளும் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டுவருகின்றன. ஆனால் இலங்கை தமிழரசு கட்சி அதன் இறுதி முடிவை இதுவரையில் அறிவிக்கவில்லை. அவ்வாறானதொரு முடிவை தமிழரசு கட்சியால் அறிவிக்க முடியுமா என்னும் கேள்வியுடன் நாட்கள் நகர்கின்றன. பொதுவான அவதானத்தில், தமிழரசு கட்சியால் அவ்வாறானதொரு உறுதியான முடிவை அறிவிக்க முடியுமா என்பது கேள்விக்குறியாகும். ஏனெனில் அந்தளவிற்கு கட்சி உள் முரண்பாடுகளுக்குள் சிக்கியிருக்கின்றது.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு தொடர்பான உரையாடல்கள் வெளிவந்ததை தொடர்ந்து, எம்.ஏ.சுமந்திரன் தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தர்க்கரீதியில் எதிர்கொள்ளுவதை விடவும், மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கிலேயே அவரது பார்வை அமைந்திருந்தது.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு தர்க்கரீதியில் பலமானது என்பதை, சுமந்திரன், ஏனைய அரசியல்வாதிகளை விடவும் ஆழமாக புரிந்து கொள்ளக் கூடிய ஒருவர் ஆனால் இவ்வாறானதொரு முயற்சியை ஆதரிக்கும் அரசியல் பின்புலம் அவரிடம் இல்லை. அவரைப் பொறுத்தவரையில் ஒரு தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிப்பதன் மூலம் இதனை சாதாரணமாக கடந்து செல்லவேண்டும் என்னும் நிலைப்பாடுடையவர். தனது நிலைப்பாட்டுக்கு எவ்வாறான வாதங்களை முன்வைத்தாலும் கூட, அடிப்படையில் அவரது தெரிவு ஒரு தென்னிலங்கை வேட்பாளர்தான். இந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் ஒருவரால் எவ்வாறு தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்க முடியும்?

தமிழரசு கட்சி இதுவரையில் அதன் உத்தியோகபூர்வ முடிவை அறிவிக்கவில்லை. ஆனாலும் சுமந்திரன் பொது வெளிகளில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்த்து பிரச்சாரங்களை முன்னெடுத்துவருகின்றார். இதனை தோற்கடிப்பேன் என்று பகிரங்கமாக கூறுகின்றார். தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தோற்கடிப்பேன் என்று ஆவேசப்படுமளவிற்கு, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டால் தமிழினத்திற்கு அப்படியென்ன தீங்கு நேர்ந்துவிடும்? தமிழ் பொது வேட்பாளரை தோற்கடித்து, ஒரு தென்னிலங்கை வேட்பாளரை வெற்றிபெறச் செய்வதன் ஊடாக சுமந்திரன் சாதிக்கப் போவது என்ன?

சுமந்திரனும் அவரது கட்சி விசுவாசிகள் சிலரும், தமிழ் பொது வேட்பாளரை கடுமையாக எதிர்த்துவரும் நிலையில், தமிழரசு கட்சியின் சிறிதரன் அணியினர் ஆதரித்துவருகின்றனர். இந்த விடயத்தில், தமிழரசு கட்சியின் வலுவான ஆதரவுக் குரலாக சிறிதரன் இருக்கின்றார். ஆனால் சிறிதரனால் கட்சிக்குள் தனது கருத்தை வலுவாக நிலைநிறுத்த முடியவில்லை. தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழுவில் இருப்பவர்களில் அனேகர் கூட்டங்களில் பங்குகொள்வதில்லை.

இந்த நிலையில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை வாக்கெடுப்பிற்கு விட்டு முடிவு எடுக்கக் கூடிய நிலையில் கட்சியில்லை. ஆனால் ஒரு நிலைப்பாடு சரியானது என்றால், அந்த நிலைப்பாட்டை ஆதரிப்பதற்காக அனைவரையும் ஒன்று கூட்டுவதில் சிரமங்கள் இருக்கப் போவதில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை சுமந்திரன் மட்டும் எதிக்கவில்லை, தமிழரசு கட்சிக்குள் பெரும்பான்மையினர் எதிர்கின்றனர் என்னும் முடிவுக்கே வரவேண்டியிருக்கின்றது.

இதுதான் நிலைமை என்றால் இலங்கை தமிழரசு கட்சி அதன் முடிவை மாற்றிக் கொள்ளாதா? ஒப்பீட்டடிப்படையில் தமிழரசு கட்சி தமிழ் தேசிய அரசியலை பிரதிநித்துவப்படுத்தும் பிரதான கட்சி. அவ்வாறானதொரு கட்சி தமிழ் தேசிய நிலைப்பாடு ஒன்றை தோற்கடிப்பதற்காக செயற்பட்டால், அதன் பின்னர் தமிழரசு கட்சி தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக்கொள்ள முடியுமா? இந்தக் கேள்விகளுக்கான பதிலை தேடுவதில் தமிழரசு கட்சியினர் இனி தாமதிக்கக் கூடாது. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் தமிழரசு கட்சி தமிழ் தேசிய அரசியலிலிருந்து விலகிச் செல்வதாகவே நோக்கப்படும்.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான கடந்த பதினைந்து வருட காலத்தில், தமிழர் அரசியலை தீர்மானிப்பதில், தமிழரசு கட்சியே பிரதான பங்குவகித்திருந்தது. ஆனால் தமிழரசு கட்சியின் அனைத்து நகர்வுகளுமே தோல்வியில்தான் முடிந்திருக்கின்றது. இன்று, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு ஒன்றை நோக்கி சிவில் சமூக அமைப்புக்கள், புத்திஜீவிகள் என பலரும் ஒன்றிணைந்து செயற்படுதற்கான பின்னணியை இந்த அடிப்படையில்தான் புரிந்துகொள்ள வேண்டும். சம்பந்தன் தலைமையிலான தமிழரசு கட்சி சரியான தீர்மானங்களை எடுத்திருந்தால், தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டின் அடிப்படையில் தமிழ் மக்களை ஒன்றிணைக்க வேண்டியதொரு தேவை ஏற்பட்டிருக்காது.

இந்த அடிப்படையில் சிந்தித்தால், தமிழரசு கட்சி அதன் தவறுகளை சரிசெய்து கொள்ள வேண்டிய பொறுப்பை உணர வேண்டும். அப்படி உணர்ந்தால், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பதை தவிர வேறு தெரிவுகள் எதுவும் தமிழரசு கட்சிக்கு முன்னால் இல்லை. முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான ஜனாதிபதி தேர்தல்களின் போதும், தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்கும் முடிவை தமிழரசு கட்சியே தீர்மானித்திருந்தது. அப்போது, கூட்டமைப்பின் அங்கமாக இருந்த கட்சிகளுக்கும் இந்த விடயத்தில் பொறுப்பு இருக்கின்றது என்றாலும் கூட, அவர்கள் தங்களின் தவறை உணர்ந்திருப்பதன் விளைவாகவே, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்க முன்வந்திருக்கின்றனர்.

இவற்றை எல்லாம் ஒரு புறமாக வைத்துவிட்டும் சிந்திக்கலாம்தான். அதாவது, ஒரு தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்குமாறு கூறுவதற்கு தமிழரசு கட்சியிடமுள்ள நியாயம் என்ன? அதனை பொது வெளியில் முன்வைக்கும் ஆற்றலுடன் கட்சி இருக்கின்றதா? சுமந்திரனின் எதிர்ப்பு வாதங்கள் மிகவும் பலவீனமானவை. அனேகமானவை அவரது தடுமாற்றங்களினதும் தோல்வியினதும் விளைவுகளாகும். தமிழ் பொது வேட்பாளர் எதிர்பார்க்கும் வாக்குகளை பெறாது விட்டால், தமிழ் மக்கள் பேரம் பேசும் பலத்தை இழந்துவிடுவார்கள் என்பதில் எவ்வித தர்க்கமும் இல்லை. அப்படியாயின் கடந்த மூன்று தேர்தல்களிலும் தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்படவில்லை, இந்த மூன்று தேர்தல்களின் போதும் தமிழ் மக்கள் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கே அளித்திருந்தனர். இந்தக் காலத்தில் சுமந்திரன் எவ்வாறான பேரம் பேசல்களில் ஈடுபட்டார்? அந்தப் பேரம் பேசல்களால் தமிழ் மக்களுக்கு என்ன கிடைத்தது?

அரசியலில் தீர்மானம் எடுக்க வேண்டிய இடத்தில் இருப்பவர்கள் (கட்சி மற்றும் தலைவர்கள்), தீர்மானம் எடுக்க வேண்டிய தருணத்தில், தீர்மானங்களை எடுத்தேயாக வேண்டும். அதில் தவறிழைத்தால் அல்லது பின்னடித்தால், அது ஒரு இனத்தையே பாதிக்கும். தமிழ் தேசிய அரசியல் பயணத்தில் இதற்கு பல உதாரணங்கள் உண்டு.

கடந்த பதினைந்து வருடங்களில் சம்பந்தன்- சுமந்திரன் அணியின் தீர்மானங்களால், தமிழரசு கட்சி தொடர் பின்னடைவுகளையே சந்தித்திருக்கின்றது. 2010இல் பிரதான கட்சியாக இருந்த நிலைமை மாறி, கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு கீழிறங்கியிருக்கின்றது. இதனை சரிசெய்து கொண்டு, கட்சியின் தனித்துவத்தையும் மாண்பையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தமிழரசு கட்சியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் உண்டு. காலத்திற்கு ஏற்ற அரசியல் தீர்மானங்களை எடுக்கத் தவறும் ஒரு கட்சி, காலத்தால் அடித்துச் செல்லப்படுவதை எவராலும் தடுக்க முடியாது. தமிழரசு கட்சி அவ்வாறானதொரு நிலையில் விளிம்பில் இருக்கின்றது. இதனை உணரத் தவறினால், கட்சி நிர்மூலமாகுவதை எவராலும் தடுக்க முடியாது. தமிழ் பொது வேட்பாளரரை ஆதரிப்பது, தமிழரசு கட்சியை பல்வேறு வழிகளிலும் தூக்கிநிறுத்தும். இப்போது தமிழரசு கட்சியினருக்கு முன்னால் ஒரேயொரு கேள்விதான் உண்டு. அதாவது, சுமந்திரன் என்னும் தனிநபரிடம் தோற்றுப் போய், கட்சியை சிதைப்பதா அல்லது, கட்சியை காப்பாற்றுவதற்காக சில தனிநபர்களை தோற்கடிப்பதா? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொறன்ரோவில் பரதநாட்டிய அரங்கேற்றம்

குரு அரவிந்தன்

சென்ற சனிக்கிழமை யூலை மாதம் 27 ஆம் திகதி 2024 அன்று மலை 6:00 மணியளவில் ரெறன் ரோவில் உள்ள சீன கலாச்சாரமண்டபத்தில் செல்வி சாக் ஸவி திலீபனின் பரத நாட்டிய அரங்கேற்றம் சிறப்பாக நடந்தேறியது. இது போன்ற பரதநாட்டிய, இசை அரங் கேற்றங்கள் சிலவற்றில் நான் கலந்து கொண்டிருந்தாலும், அன்று இந்த நிகழ்வில் கலந்து கொண்டது போல இசை, நடன ஆசிரியர்களை நான் ஒரு போதும் இப்படியான நிகழ்வுகளில் சந்திக்கவில்லை. இந்த நிகழ்வில் பல புதிய இசை, நடன ஆசிரியர்களையும் சந்தித்து உரையாடவும் முடிந்தது குறிப்பிடத் தக்கது.







சாக்ஸவியின் தாயார் சிறிமதி சுதர்சினி அவர்கள் நடன ஆசிரியராக இருப்பதும் இவர்களின் வருகைக்கு ஒரு காரணமாக இருக்கலாம். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக அண்ணாமலை கனடா வளாகத்தைச் சேர்ந்த டாக்டர் சூரியகலா சந்திரிகா ஜீவானந்தன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்த அரங்கேற்ற நிகழ்வுக்கு அற்புத நர்த்தனாலய அதிபர் சிறிமதி அற்புதராணி கிருபராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் தனது உரையில் 'செல்வி சாக்ஸவி திலீபன் மிகவும் திறமை உள்ள பாத்திர லட்சணங்கள் பொருந்திய அன்பும், அடக்கமும், பணிவும் உள்ள சிறந்த மாணவி. நல்ல அங்கசுத்தம், சிறந்த வயப்பிடிப்பு, உணர்ந்த பாவம் என்பனவற்றை சாக்ஸவியின் இந்த நடனத்தில் கண்டு மகிழ்ந்தேன். இந்த அரிய கலையைப் புலம்பெயர்ந்த இந்த மண்ணில் உள்ள அடுத்த தலைமுறையினருக்கும் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய பொறுப்பு சாக்ஸவி போன்றவர்களிடமே இருக்கிறது, அவரது எதிர்காலம் சிறக்க எனது வாழ்த்துக்கள்' என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

சாக்ஸவி தனது 5 வது வயதில் சலங்கைப் பூசையை செய்திருந்தார். இவர் நடன ஆசிரியையான சிறிமதி சுதர்சினி திலீபன் அவர்களின் மாணவி மட்டுமல்ல, அவரது மகளுமாவார். பதின்நான்கு வயது நிரம்பிய இவர் தனது பாடசாலைப் படிப்போடு பரதநாட்டியத்தைவிட வாய்ப்பாட்டு, வீணை, வயலின் போன்றவற்றையும் கற்று வருகின்றார். விளையாட்டுத் துறையிலும் ஈடுபாடு கொண்டிருக்கின்றார். இவரது இசைத் திறமையையும், தமிழ் ஆளுமையையும் பல மேடைகளில் பார்த்துப் பாராட்டியிருக்கின்றேன்.

அணிசேர் கலைஞர்களின் பங்களிப்பு மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. இந்த நிகழ்வில் சிறி கே. எஸ். பாலகிருஸ்னன் நட்டுவாங்கம் செய்வதாக இருந்த போதிலும், தவிர்க்க முடியாத காரணத்தால் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. அவருக்குப் பதிலாக சிறிமதி சுதர்சினி திலீபனும், கார்த்திகா நாராயணனும் நட்டுவாங்கம் செய்தார்கள். திரு. அருண் கோபிநாத், சிறிமதி பிரபா தயாளன், ரதிரூபன் பரம்சோதி, சிறி விஸ்ணு ஆகியோர் தங்கள் இசைத்திறமையை அணிசேர் கலைஞர்களாக மேடையில் வெளிப்படுத்திச் சபையோரின் பாராட்டைப் பெற்றிருந்தனர்.

செல்வி சாக்ஸவியை குரும்பசிட்டி நலன்புரி சங்கத்தினர் பாராட்டிக் கௌரவித்ததைத் தொடர்ந்து, நிகழ்வின் முடிவில் பங்குபற்றிய கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். திரு. ராகவன் பரம்சோதி அவர்கள் தனது பேச்சுத் திறனால் இந்த நிகழ்வைச் சிறப்பாகத் தொகுத்து வழங்கியிருந்தார். இரவு விருந்துபசாரத்துடன் அரங்கேற்ற நிகழ்வு சிறப்பாக நிறைவேறியது. ●

---




# வியுக்தியார் பதில்கள்

**இரா. இராஜேஸ்கரன்,**
**ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** மாகாண சபைத் தேர்தலைப் பழைய தேர்தல் சட்டத்துக்கு அமைவாக நடத்துவதற்கு வழி செய்யும் விதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பித்துள்ள தனிநபர் சட்ட மூலத்தை இரண்டாவது வாசிப்பு விவாதத்துக்காக எதிர்வரும் செப்டெம்பர் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் எடுத்துக்கொள்வது என்று முடிவுசெய்யப்பட்டிருக்கிறதே. அப்படியெனில் மாகாணசபைகளுக்கும் விரைவில் தேர்தல் வரும் என்று நம்பலாமா?

**வியுக்தியார்:** மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்த போது நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்தது. வடக்கில் அப்போதுதான் விக்கினேஸ்வரன் தமிழ் அரசில் இருந்து வெளியேறி கலகம் பண்ணிக்கொண்டிருந்தார். அவர் மீது மக்களின் பார்வை இருந்ததால், மாகாண சபைகளுக்கு தேர்தல் நடந்தால் அவர் வெற்றி பெற்றுவிடுவார் என்று சுமந்திரனும், தெற்கில் மகிந்தவின் பொதுஜனபெரமுன வெற்றிபெற்றுவிடும் என்று ரணிலும் கூட்டாகச் சேர்ந்துதான், மாகாண சபைகளின் தேர்தல்களை ஒத்திவைக்க புதிய தேர்தல் முறையை கொண்டுவந்தார்கள். அந்த புதிய முறையின் கீழ் மாகாணங்களுக்கும் தொகுதிகளை பிரிக்கவேண்டியிருந்தது. அந்த சிக்கலால் தேர்தல்களை நடாத்தமுடியவில்லை. இப்போது தான் செய்த தவறுக்கு சுமந்திரனே பிராயச்சித்தம் காண, பழைய முறையில் தேர்தல் நடாத்தும் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார். ஆனால் இவ்வளவு காலமும் கிடப்பில் போட்டிருந்த அதை இப்போது இருவருமே சேர்ந்து தூசிதட்டி எடுத்திருக்கிறார்கள். அதனைக் கூட முடிந்தவரை இழுத்தடித்து செப்டம்பர் 6ம் திகதிக்கு கொண்டுபோயிருக்கிறார்கள். தமிழ் மக்களுக்கு எதையாவது செய்து காட்டினால்தான் தனக்கு வாக்கு போடுவார்கள் என்று ரணிலும், ரணிலுக்கு ஆதரவு வழங்குவதற்காக அவர் எதையோ செய்ய பார்க்கிறார் என்று சொல்ல சுமந்திரனும் யோசிக்கிறார்கள் போல் தெரிகின்றது. நமக்கு என்ன? எதுவோ நடந்தால் நல்லதுதானே.

---

**அ. சிவகணேஸ்,**
**மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** இலங்கை தனது இறைமை, ஆட்புல ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கு இராணுவ ரீதியிலான உதவிகளை வழங்க தயார் என சீனா தெரிவித்துள்ளது. இலங்கைக்கான சீன தூதுவர் கி சென்ஹொங் இதனை தெரிவித்திருந்தார். இலங்கையில் புவிசார் அரசியல் நகர்வுகள் அதிகளவில் முன்னெடுக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலையில் அவர் இதனை கூறியுள்ளதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?.

**வியுக்தியார்:** இந்தியாவின் பாதுகாப்பை கருத்தில் கொள்ளாமல், இலங்கை எந்த விடயத்திலும் ஈடுபடாது என்று அண்மையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்தாரே கவனிக்கவில்லையா? சீனா ராணுவ உதவி வழங்கினால், அவர்கள் கொடுக்கும் ஆயுதத்தை எந்தத் திசையில் செலுத்தினாலும் அது இந்தியாவில்தான் போய் விழுகின்றதோ தெரியவில்லை. எதற்கும் சீனாவின் உதவியை பெறுவதற்கு முதல் இலங்கை ஒன்றுக்கு பலதடவை யோசிக்கும் என்று நம்புவோம்.

---

**செல்வா. கேசவன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்களை கடற்படையினர் கைதுசெய்ய முயன்றபோது கடற்படை படகு மீனவர் படகை மோதியதில் மீனவர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு மீனவரை காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. முன்னர்தான் இலங்கைக் கடற்படை துப்பாக்கிச்சூடு நடாத்தியதில் இந்திய மீனவர் பலி என்று செய்திகள் வரும். ஆனால் இப்போது அப்படி இல்லை என்றாலும் தொடர்ந்து இப்படி கடலில் பலியாவது நிறுத்தப்படவேண்டாமா?

**வியுக்தியார்:** உண்மைதான், சில நாட்களுக்கு முன்னர், அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்களைக் கைது செய்ய கடற்படை முயன்றபோது, தமிழக மீனவர்களின் படகு கடற்படைப் படகை மோதியதில் கடற்படைச்சிப்பாய் பலியானதாக செய்தி வந்திருந்தது. இப்போது கடற்படை படகு மோதி இந்திய மீனவர் பலியாகியிருக்கிறார். இதுபோன்ற மரணங்களைத்தடுக்க, அத்துமீறிய மீன்பிடியை தடுப்பது அல்லது அவர்களாகவே அத்துமீறாமல் இருப்பதுதான் தீர்வாக முடியும்.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ் பொது வேட்பாளர் ஒரு வாரத்துக்குள் இறுதி செய்யப்படுவார் என்று தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எவ்.) தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளாரே. வேட்பாளர் ஒருவரை தெரிவுசெய்வதில்கூட இவர்களால் முடியவில்லை என்று சிலர் கேலி செய்வதும் சரியானதுதானே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வியுக்தியார்:** சிறிலங்கா பொதுஜன பெரமுன என்பது ஆரம்பிக்கப்பட்ட சில வருடங்களிலேயே ஆட்சியைப் பிடித்த கட்சி. இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்சவை தலைவராகக் கொண்ட கட்சி. அப்படியிருந்தும் அந்தக் கட்சியாலேயே ஒரு பொருத்தமான ஜனாதிபதி வேட்பாளரை கண்டுபிடிக்க முடியவில்லையே. அப்படியிருக்கையில் தமிழ் சிவில் அமைப்புக்கள், ஒருசில தமிழ் கட்சிகள் என்று பலரும் இணைந்து அமைத்த ஒரு பொதுக்கட்டமைப்பு பொருத்தமான வேட்பாளர் ஒருவரை தெரிவுசெய்வதென்பது இலகுவானது இல்லைத்தானே. இங்கே வேட்பாளர் வெற்றி பெற்று ஜனாதிபதி ஆகுவதற்காக போட்டியிடவில்லையே. எனவே ஆற - அமர யோசித்து அவர்கள் ஒருவரை தெரிவுசெய்யட்டுமே. இப்போது எதற்காக அவசரப்படவேண்டும்?

---

**ரி. ஜீவன்குமார்**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு துப்பாக்கி அனுமதிப்பத்திரம், ஆயிரத்து 200இற்கும் மேற்பட்ட மதுபானசாலை அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளாரே. அப்படியெனில் புதிதாக 1200 மதுபானச்சாலைகள் வரப்போகின்றவா?

**வியுக்தியார்:** சில வருடங்களுக்கு முன்னர், கிளிநொச்சியில், மதுபானசாலைகள் இல்லாததால்தான், சட்டவிரோத கசிப்பு உற்பத்தி பெருமளவில் நடக்கின்றது என்று அந்த மாவட்டத்தின் எம்.பி. சிறிதரன் கூறியிருந்தார். அதாவது மதுபானச்சாலைகள் இல்லாவிட்டால் கசிப்பு உற்பத்தி அதிகரித்து விடும் என்ற எம்.பிக்களின் கரிசனையால்தான் அரசாங்கம் புதிய அனுமதி பத்திரங்களை வழங்கியிருக்கிறது என்று நம்புகின்றேன். அதனால்தான் அவை எம்.பி.க்களுக்கு வழங்கப்பட்டிருக்கவேண்டும். அவர்களுக்குத்தானே எங்கே திறந்தால் கசிப்பு உற்பத்தியை தடுக்கமுடியும் என்பதும் தெரிந்திருக்கும்.

---

**க. தில்லைநாதன்,**
**மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் சகோதரன் மற்றும் செயலாளர் ஆகிய இருவர் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனராமே. ஆற்று மணல் அகழ்வுக்கான உரிமத்தை வழங்குவதற்காக ஒருவரிடமிருந்து 15 இலட்சம் ரூபாய் பணம் இவர்களுக்கு இலஞ்சமாக வழங்கப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாம். ஒரு அமைச்சர், லஞ்சம் வாங்குவதற்கே தனது சகோதரரை பயன்படுத்தியிருப்பாரா?

**வியுக்தியார்:** அண்மையில் மட்டக்களப்புக்கு சென்றிருந்த ஜனாதிபதிக்கு வியாழேந்திரன் தனது வீட்டில் பாரிய வரவேற்பு வழங்கி கௌரவித்திருந்தார். மறுநாளே அவருக்கு மணல் அகழ்வுக்கு அனுமதிவழங்கும் அமைச்சு மேலதிகமாக வழங்கப்பட்டது. அப்போதே ஜனாதிபதி ஏதோ திட்டம் போடுகிறார் என்று நினைத்தேன். எனது நினைப்பு சரியாகியிருக்கிறது போலும்.

# எல்லை தாண்டிய உளவுப் போரில் மொசாட்டின் இலக்குத் தவறாத அதிரடி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

மத்திய கிழக்கில் பதற்றத்தை உருவாக்கியுள்ள ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா தலைவர்களின் கொலைகளின் பின்னணியில் யார் இருந்திருப்பார்கள் என்பது அனைவருக்கும் வெட்ட வெளிச்சமாக தெரியும்.

இஸ்ரேல் மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் சிறியதொரு நாடு, ஆனால் ராணுவத்தில் உளவு துறையில் அனைத்து நாடுகளுக்கும் முன்னோடி இஸ்ரேல் தான்.

உலகில் உள்ள அனைத்து உளவு அமைப்புகளுக்கும் முன்னோடி என்றே கூறப்படுகிறது இந்த இஸ்ரேல் நாட்டின் மொசாட் உளவு அமைப்பு. உலகிலேயே மிக திறமையான மற்றும் அதிபயங்கரமானதாக அனைவராலும் கருதப்படும் உளவு அமைப்பே மொசாட்.

அமெரிக்காவின் சி.ஐ.ஏ. வையே உளவு பார்க்கும் உளவு துறை என்றும் கூறப்படுகிறது. ஆரம்பத்தில் அமெரிக்காவிடம் தான் பயிற்சி பெற்றது மொசாட். ஆனால் இப்போது அமெரிக்கா சி.ஐ.ஏ.வே ஆச்சரியப்படும் அளவிற்கு மொசாட் வளர்ந்து உள்ளது.

இஸ்ரேலுக்கு எதிர் காலத்தில் எதிரி ஆவான் என்று மொசாட் யாரையாவது எண்ணினால் ஆரம்பத்திலேயே அந்த அமைப்பை அழித்து விடும். 1972ம் ஆண்டு மியூனிச் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற இஸ்ரேல் வீரர்கள், பயிற்சியாளர்கள் 11 பேர் பாலஸ்தீன போராளிகளால் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவத்திற்குக் காரணமான ஒவ்வொருவரையும் பழிவாங்கி விட்டுதான் இஸ்ரேல் அமைதியானது.


ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாட்டில் இஸ்ரேல் உளவு அமைப்பு மொசாட் மேற்கொண்ட ரகசிய படுகொலை வேட்டையின் பெயர் Operation Wrath of God.


இஸ்ரேல் மிகச் சிறிய நாடாகவே இருந்த போதிலும் அந்த சிறிய நாட்டை பார்த்து பொருளாதாரத்திலும் மக்கட்தொகையிலும் மிகையாக இருக்கும் மேற்குலக நாடுகள் கூட பயப்படுகிறது என்றால் அதற்கு மிக மிக முக்கிய காரணம் மொசாட்.

**லெபனானில் ஹிஸ்புல்லா தளபதி இலக்கு:**

இஸ்ரேலின் எல்லை தாண்டி, நாடு கடந்த ட்ரோன் குண்டுத்தாக்குதலில் ஈரானில் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹானியே, லெபனானில் ஹிஸ்புல்லா தளபதி பஹத் சுக்கர் ஆகியோரின் மரணங்கள், உளவுப் போரில் மொசாட்டின் இலக்குத் தவறாத அதிரடியை உலகிற்கு மீண்டும் நிருபித்துள்ளன.

கடந்த வார ஞாயிறு அன்று இஸ்ரேலின் உதைப்பந்தாட்ட மைதானத்தின் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் நடத்திய ஏவுகணை தாக்குதலில் 12 சிறுவர்கள் கொல்லப்பட்டதை தொடர்ந்து அந்த தாக்குதலுக்கு காரணமான ஹிஸ்புல்லாவின் முக்கிய தளபதி பஹத் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாவின் கவுன்சில் தலைமையகம் மீது இஸ்ரேல் நடத்திய ட்ரோன் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.





இவர் 83ஆம் ஆண்டு லெபனானில் அமெரிக்க தளம் ஒன்றின்மீது நடத்திய தாக்குதலில் 241 அமெரிக்க படைகள் கொல்லப்பட்டதற்கு பிரதான சூத்திரதாரி என வர்ணிக்கப்பட்டவர். அவரின் தலைக்கு அப்போது பரிசாக 5 மில்லியன் அமெரிக்க டொலரை பரிசாக தருவதாக அமெரிக்க அறிவித்து இருந்தது.

இருவரினதும் இழப்பு, மத்திய கிழக்கில் போராடிவரும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளுக்கு மத்தியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மையே.

**ஈரானில் படுகொலையான ஹமாஸ் தலைவர்:**

ஈரானின் புதிய அதிபராக தேர்வான மசூத் பெசெஷ்கியன் பதவியேற்பு விழாவில் பங்கேற்க சென்றிருந்தார் இஸ்மாயில் ஹனியே. தெஹ்ரானில் அவர் தங்கியிருந்த வீட்டை குறிவைத்து இஸ்ரேலிய படைகள் தாக்குதல் நடத்தியது. இதில் ஹனியே மற்றும் அவரது பாதுகாவலர் என 2 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை இந்த தகவலை உறுதிப்படுத்தி உள்ளதாக ஈரான் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது. ஹனியே படுகொலைக்கு இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை.

ஆயினும் பாலஸ்தீன போராளிகளைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்தும் இஸ்ரேல் படைகளும், உளவு அமைப்பு மொசாட்டும் மிகத்தீவிரமாக வேட்டையாடத் தொடங்கி உள்ளன.

**யாரிந்த இஸ்மாயில் ஹனியே:**

இஸ்மாயில் ஹனியே கடந்த 2017 முதல் ஹமாஸின் தலைவராக இருந்து வருகிறார். தற்போது ஹமாஸின் அரசியல் பணியகத்தின் தலைவராக பணியாற்றி வந்துள்ளார்.

அத்துடன் இஸ்மாயில் ஹனியே ஹமாஸ் போராளிக் குழுவின் நாடுகடந்த அரசின் தலைவராக இருந்து வந்தார். சமீபத்திய ஆண்டுகளில் கட்டாரில் தனது பெரும்பாலான நேரத்தை செலவிட்டார்.

தற்போதைய இஸ்ரேல்-காசா போரில், அவர் போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் ஒரு பேச்சுவார்த்தையாளராக செயல்பட்டார். அத்துடன் ஹமாஸின் முக்கிய நட்பு நாடான ஈரானுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

இந்த நிலையில், ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவரான இஸ்மாயில் ஹனியே ஈரானில் கொல்லப்பட்டமை அரபுலகில் பாரிய அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இஸ்மாயில் ஹனியே இவர் பாலஸ்தீனத்தில் 1962 ஆம் ஆண்டு அகதி முகாமில் பிறந்தவர். உலக இஸ்லாமிய அமைப்புகள் அனைத்தும் ஒருங்கிணைந்து இஸ்ரேலை அழித்தொழிக்க முன்வரவேண்டும் என மத்திய கிழக்கில் இஸ்லாமிய இளைஞர்களை அணித்திரட்டி ஹமாஸ் இயக்கம் வலுப்பெற காரணமாக இருந்தவர்.

ஹமாஸின் ஆதிக்கத்துக்குள் காசாவை கொண்டு வந்தவர்களில் முதன்மையானவரும் அங்கு பிரதமராகவும் ஆக்கப்பட்டவர். அத்துடன் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஆதிக்கத்தை குறைத்து காசாவில் சுய பொருளாதார அபிவிருத்திகளையும் மேற் கொண்டவர்.

# மத்தியக் கிழக்கில் போர் மூளும் அபாயமா?

ஈரானில் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டதை அடுத்து நிலைமை மீண்டும் மோசமடைவதற்கான சாத்தியக்கூறு அதிகரித்துள்ளது. ஹனியேவின் மரணத்திற்குப் பழிவாங்கப் போவதாக ஈரான் கூறியுள்ளது.

பதற்றத்தைக் குறைக்க அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளதுடன், பதிலடி கொடுக்க வேண்டாம் என ஈரான் மீது அழுத்தத்தை அதிகரித்துள்ளது.

ஹனியேவின் மரணத்தை அடுத்து மத்திய கிழக்கில் பதற்றம் நிலவுகிறது. எனவே இது தொடர்பாக இஸ்ரேல், பாலத்தீனம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் ஊடகங்களில் பல வகையான எதிர்வினைகள் காணப்படுகின்றன.

ஈரான் இஸ்ரேல் மீது நேரடித் தாக்குதலை நடத்தக்கூடும் என்ற அச்சத்தை டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல் வெளிப்படுத்தியுள்ளது.

ஈரானின் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனி இஸ்ரேல் மீது நேரடித் தாக்குதலை நடத்த உத்தரவிட்டதாக வெளியான செய்தியை மேற்கோள் காட்டி செய்தித்தாளின் இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்று ஈரானிய உயர் அதிகாரிகளை மேற்கோள் காட்டிய நியூயார்க் டைம்ஸ் அறிக்கையை செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது. தெஹ்ரானில் ஹனியே கொல்லப்பட்ட உடனேயே அவசரக் கூட்டத்திற்கு கமேனி உத்தரவிட்டதாக இந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தாக்குதல் தொடுக்கும் பட்சத்தில், தாக்குதல் மற்றும் தற்காப்பு ஆகிய இரண்டிற்கும் தயாராக இருக்குமாறு கமேனி இஸ்லாமிய புரட்சிக் காவலர் படை மற்றும் ஈரானிய ராணுவத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

தாக்குதல் நடந்தால் இஸ்ரேலை அமெரிக்கா பாதுகாக்கும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லாயிட் ஆஸ்டின் கூறியதையும் டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல் வெளியிட்டுள்ளது.

மற்றொரு இஸ்ரேலிய நாளிதழான ஹாரேத்ஸ், ஹனியே கொல்லப்பட்ட செய்திக்கு, 'ஹனியேவின் கொலை ஹமாஸுக்கு அடி' என்ற தலைப்பை அளித்துள்ளது.

'ஹனியேவின் படுகொலை ஹமாஸ் தலைமைக்கு ஓர் அச்சுறுத்தல். ஈரான் மற்றும் ஹெஸ்புலாவை ஆத்திரமூட்டச் செய்வதாக அது உள்ளது. இருந்தபோதிலும், ஹமாஸில் எந்தக் கிளர்ச்சியும் இருக்காது. மேலும் ஹமாஸின் அரசியல் பணியகத்தில் உள்ள உறுப்பினர்கள் யாராவது ஒருவர் அந்த இடத்தை நிரப்புவார்,' என்றும் அது கூறியுள்ளது.

'இது ஹமாஸின் எல்லா தலைவர்களும் இஸ்ரேலின் இலக்கு என்ற செய்தியை அனுப்புகிறது,' என்று ஜாக் கெரி ஹாரேத்ஸில் தனது கட்டுரையில் எழுதியுள்ளார்.

**அரபு ஊடகங்கள் என்ன சொல்கின்றன**

ஹனியே மற்றும் லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் இஸ்ரேலிய தாக்குதல்களில் கொல்லப்பட்ட ஹெஸ்புலா தளபதி ஃபுவாத் ஷேகோர் பற்றிய செய்திகளுக்கும் க்யுட்ஸ் நியூஸ் நெட்வொர்க் முக்கிய இடம் அளித்துள்ளது.

ஹனியே இருந்த கட்டடத்தின் மீதான தாக்குதல் குறித்த பிரத்யேக தகவல்கள் தங்களிடம் இருப்பதாக க்யுட்ஸ் நெட்வொர்க் கூறியுள்ளது.

தெஹ்ரானில் ஹனியே தங்கியிருந்த விருந்தினர் மாளிகை கட்டடம் திறந்தவெளியில் அமைந்திருந்ததாகவும், மலைகள் மற்றும் மரங்களால் சூழப்பட்டிருந்ததாகவும் தகவல் கிடைத்துள்ளதாக அந்த வலையமைப்பு தெரிவித்துள்ளது. அருகிலுள்ள மலையில் இருந்து பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

இந்தப் பகுதி சிறப்புப் பாதுகாப்பு வளையத்தின் கீழ் வருகிறது. இதன் பாதுகாப்புப் பொறுப்பு ரெவல்யூஷனரி காவலர்களின் கையில் உள்ளது. ஹனியே மற்றும் அவரது மெய்க்காப்பாளர் தெஹ்ரானில் உள்ள அவர்களது இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டதாக ஹமாஸ் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தது.

ஈரானில் ஹனியேவின் கொலை, அமெரிக்கா போரில் இறங்கும் அபாயத்தை உருவாக்கியுள்ளதாக அல் ஜசீரா எழுதியுள்ளது. இஸ்மாயில் ஹனியேவின் இறுதி ஊர்வலம் இரானின் உச்ச தலைவர் கமேனி தலைமையில் நடைபெற்றதாக அல்ஜசீரா தெரிவித்தது.

ஆனால் என்ன பதிலடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் ஈரானில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. 'ஹனியேவின் கொலைக்கு பதிலளிக்கும் வகையில் ஈரான் உறுதியான நடவடிக்கைக்கு உத்தரவிட்டது' என்று பாலத்தீன செய்தி இணையதளமான பாலத்தீன குரோனிக்கிள் எழுதியது.

இந்த அரசியல் படுகொலையைக் கண்டித்து எகிப்து, ஜோர்டான் ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் அறிக்கை அளித்துள்ளதாக அந்த இணையதளம் தெரிவித்துள்ளது.

இதன் போர்வையில் மேலும் வன்முறையை நியாயப்படுத்தும் ஈரானின் முயற்சிகளை பிரிட்டிஷ் பிரதிநிதி நிராகரித்துள்ளார். பாதுகாப்பு சபையின் உடன்படிக்கைகளுக்கு இணங்குமாறு இஸ்ரேலை சீனா கேட்டுக் கொண்டுள்ளது.

ஹமாஸின் அரசியல் தலைமையின் படுகொலைக்குப் பிறகு, காஸாவில் போர்நிறுத்த ஒப்பந்தம் தடம் புரண்டு, பரந்த போருக்கான ஆபத்து இருப்பதாக அமெரிக்கா கவலை கொண்டுள்ளது என்று லெபனான் தீவிரவாத அமைப்பான ஹெஸ்புல்லாவுடன் தொடர்புடைய செய்தி இணையதளமான அல்-மயாதீன், அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் குடிநீர் விநியோகம் 40 சதவீதமாக உயர்வடையும்

## யாழில் அமைச்சர் ஜீவன் நம்பிக்கை



யாழ்ப்பாணம், ஓக. 04

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றபோது வடக்கில் குடிநீர் விநியோகம் 4 சதவீதமாகக் காணப்பட்டது. தாளையடி குடிநீர் திட்டத்தின் மூலம் இது இன்று முதல் நாற்பது சதவீதமாக உயர்வடையும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் நம்பிக்கை வெளியிட்டார்.**


யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

குடிநீர் அடிப்படை உரிமையாகும். அதை மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, செலவு அதிகமாக இருந்ததால் சிக்கல் ஏற்பட்டது. ஆனால், மக்களின் குடிநீர் தேவையை உறுதிப்படுத்த இந்த சவாலை ஏற்றுக் கொண்டோம்.

இந்தத் திட்டத்துக்கு பல கிராமங்கள் காணிகளை கொடுக்க விரும்பவில்லை. இருப்பினும் இந்தக் காணியை வழங்கிய தாளையடி கிராம மக்களுக்கு நன்றி- என்றார்.

(எ)

# சிறீ லங்கா ஆணழகன் போட்டியில் தங்கம் வென்றார் ஷங்கர் கணேஷ்!



நுவரெலியா, ஓக. 04

மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தின், நானுஓயா பிரதேசத்தை சேர்ந்த உதயகுமார் ஷங்கர் கணேஷ், கொழும்பு தெஹிவளையில் நடந்த 2024 ஆம் ஆண்டிற்கான மிஸ்டர் சிறீ லங்கா போட்டியில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

மிஸ்டர் சிறீ லங்கா போட்டியானது கடந்த ஜூலை மாதம் 28 திகதி நடைபெற்றது.

இந்தப் போட்டியில் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் அறுபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்றனர்.

இந்த நிலையில் இரண்டு பிரிவுகளில் உதயகுமார் ஷங்கர் கணேஷ் சாதனை படைத்து முறையே தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளார்.

(எ)

# 3 வாகனங்கள் விபத்து குடும்பப் பெண் பலி!

மாத்தறை, ஓக. 04

மோட்டார் சைக்கிள் - ஓட்டோ மற்றும் பேருந்துடன் மோதிய விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

மாத்தறை, திக்வெல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொழும்பு - வெல்லவாய வீதியில் திக்வெல்ல நகரத்துக்கு அருகில் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற இந்த விபத்திலேயே பெண் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தங்காலையிலிருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று அதே திசையில் பயணித்த ஓட்டோ மற்றும் பேருந்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்றவரும் பின்புறத்தில் அமர்ந்திருந்த பெண்ணொருவரும் படுகாயமடைந்த நிலையில் பதீகம மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின்னர் பெண் உயிரிழந்ததாக பொலிஸார் கூறினர்.

தங்காலை சீனிமோதர பகுதியில் வசித்த 49 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

இதனையடுத்து, ஓட்டோ சாரதியும் பேருந்து சாரதியும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திக்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

கொழும்பு மாநகர சபைக்கு

# ரூ. 90 மில்லியனை செலுத்த தவறிய தனியார் நிறுவனம்

கொழும்பு, ஓக. 04

கொழும்பு நகரில் வாகனங்களை நிறுத்துவதற்காக தானியங்கி அமைப்பின் ஊடாக பணம் வசூலித்த நிறுவனம் 90 மில்லியன் ரூபாயை கொழும்பு மாநகர சபைக்கு செலுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டு இது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் மஞ்சுள குலரத்ன தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தில் நிலவும் குறைபாடுகள் காரணமாக அடுத்த வருடத்துக்குள் புதிய இலத்திரனியல் முறைமையை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக அவர் கூறினார்.

(எ)

# துஷ்பிரயோகங்களுக்குள்ளாகும் ஆண்கள் முறைப்பாடளிக்கலாம்

கொழும்பு, ஓக. 04

பெண்களிடம் இருந்து ஆண்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குள்ளானால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்க முடியுமென பொலிஸார் தெரிவித்தனர்.

1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனை திருத்தச் சட்டத்தின் 345 ஆவது பிரிவின் கீழ் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குற்றச்செயல் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஆண், பெண் என்ற பாகுபாடு காட்டப்படவில்லை எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

இதன்படி, ஒரு ஆணோ அல்லது ஆண்சிறுவனோ ஏதேனும் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளானால், அவர் தயக்கமின்றி அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யலாம்.

சமூகத்தில் பதிவாகும் சம்பவங்களை அவதானிக்கும் போது, பெண்களால் ஆண்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ)

# வர்த்தகர்களிடம் ரூ. 2 கோடி கொள்ளை அதிரடி படையினர் உட்பட 6 பேர் கைது

கொழும்பு, ஓக. 04

சீதுவ லியனகேமுல்ல பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் மாணிக்கக்கல் வர்த்தகர்கள் இருவரிடம் இருந்து இரண்டு கோடி ரூபாய் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் இருவர் உட்பட 6 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் பேலியகொட மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில், வாகரை விசேட அதிரடிப் படை முகாமில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும், கொனஹேன விசேட அதிரடிப் படை முகாமில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி ஒருவரும் கண்டி, கேகாலை, தியத்தலாவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நான்கு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு விசேட அதிரடிப் படை சீருடைகள், கைவிலங்குகள், 51 இலட்சத்து 29. 000 ரூபாய் பெறுமதியான இரண்டு வான்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# ரஷ்யா-அமெரிக்கா கைதிகள்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் செய்தியின் முக்கியத்துவத்தையும், இந்த ஒப்பந்த பேச்சுவார்த்தைகளுக்கு அது ஏற்படுத்தியிருக்கும் ஆபத்தையும் உணர்ந்து, இது 'இந்த செயல்முறை மேலும் கடினமானதாக இருக்கும்" என்று அவர்களிடம் கூறினார்.

கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் மறுகட்டமைக்கப்பட வேண்டும் மற்றும் அமெரிக்கா மற்றும் ஜெர்மனி மீண்டும் ஒருங்கிணைந்தது.

அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸ் பின்னர் இரண்டு முக்கியமான சந்திப்புகளை நடத்தினார்.

பிப்ரவரி நடுப்பகுதியில் நடந்த மியூனிக் பாதுகாப்பு மாநாட்டில் அவர் கலந்து கொண்டார், அங்கு அவர் கிராசிகோவை விடுவிப்பதன் முக்கியத்துவத்தை அதிபர் ஸ்கோல்ஸுக்கு விளக்கினார்.

அவர் ஸ்லோவேனியாவின் பிரதமரையும் சந்தித்தார், அங்கு இரண்டு ரஷ்யக் கைதிகள் சிறை வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரின் விடுதலைக்கு ரஷ்யா அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்தது. இதனையறிந்த அமெரிக்கா ஸ்லோவேனியாவிடம் பேசியது. அதன் விளைவாக அவர்கள் இருவரும் வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

பின்னர் வந்த வசந்த காலத்தில், நவல்னியின் பெயர் நீக்கப்பட்டப் புதிய ஒப்பந்தம் வெள்ளை மாளிகையில் புதுவடிவம் பெற்றது. ஜூன் மாதத்தில், கிராசிகோவை விடுவிக்க ஜெர்மனி ஒப்புக்கொண்டது.

'உங்களுக்காக, நான் இதைச் செய்கிறேன்,' என்று ஜெர்மன் அதிபர் ஓலாஃப் ஷால்ஸ் அமெரிக்க அதிபர் பைடனிடம் கூறினார்.

[illegible] மாதத்தின் நடுப்பகுதியில், ஒப்பந்தத்தின் விதிமுறைகளை ஏற்றுக்கொண்டு ரஷ்ய சிறைகளில் உள்ள பட்டியலில் உள்ளவர்களின் விடுதலையை ஏற்றுக்கொண்டது.

ஆனால் பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தை எட்டியபோது, உள்நாட்டு அரசியல் ஊடுருவியது, மோசமான விவாதத்திற்குப் பிறகு நவம்பரில் தேர்தலில் போட்டியிடும் தனது முயற்சியில் பைடன் தனது சொந்த ஜனநாயகக் கட்சிக்குள்ளேயே பெரும் அழுத்தத்திற்கு ஆளானார்.

சல்லிவனின் கூற்றுப்படி, ஜூலை 21 அன்று பைடன் மீண்டும் அதிபர் தேர்தலுக்குப் போட்டியிடப் போவதில்லை என்று அறிவிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு, அவர் தனது ஸ்லோவேனிய கூட்டாளியுடன் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தை உறுதி செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவர்...

நிர்வாகம், மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து நேற்றுக் காலை மருத்துவர் அர்ச்சுனா மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அண்மையில் மன்னார் தம்பன்னை குளத்தைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர் மரணமடைந்த சம்பவம் தொடர்பில் தகவல் சேகரிக்க வந்த நிலையில், மருத்துவர்கள் மற்றும் சுகாதார ஊழியர்களின் சேவைக்கு இடையூறு ஏற்படுத்தினார் என மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து மருத்துவர் அர்ச்சுனா கைது செய்யப்பட்டு மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

அவரை 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-எ)

## ஜனாதிபதித்...

சீர்திருத்தத் திட்டத்தின்படி, அதன் சிரேஷ்ட செயற்பாட்டுத் தலைவர் பீற்றர் ப்ரூவர் உள்ளிட்ட குழுவினர், கடந்த 25 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்து, பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார மற்றும் நிதி அறிமுகம் குறித்து கலந்துரையாடினர்.

இலங்கை அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள், மொத்த உள்நாட்டு உற்பத்தியில், தொடர்ச்சியான மூன்று காலாண்டு வளர்ச்சி, குறைந்த பணவீக்கம், வருவாய் சேகரிப்பில் வளர்ச்சி மற்றும் வெளி கையிருப்புகளை கட்டியெழுப்புதல் ஆகியவற்றுடன், மீட்சிக்கு உதவிய விடயங்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

போக்குவரத்து இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது 2025 இல் வருவாயை வலுப்படுத்த உதவும் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2025 ஏப்ரல் மாதத்துக்குள், ஏற்றுமதியாளர்களுக்கு வற் வரியை திரும்பப் பெறும் முறையை நிறுவுதல் உள்ளிட்ட வரி நிர்வாக சீர்திருத்தங்கள் மூலம், நிலைமையை மேலும் மேம்படுத்த முடியும் என சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## ஈ.பி.டி.பி...

ரணில் விக்கிரமசிங்க கூட்டத்தில் கலந்து கொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தாம் தொடர்புடையதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி-

யாழ்.மாவட்டத்தின் ஊடாக பொருளாதாரத்தை பலப்படுத்த எதிர்பார்க்கிறோம். அத்துடன் காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இந்தியாவுடன் கலந்தாலோசிக்கிறோம். சிமெந்து நிறுவனம் இருந்த இடத்தில் முதலீட்டு வலயமொன்று ஆரம்பிக்கப்படும்.

பூநகரியிலும் அதனைச் செய்வோம். பலாலியில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவோம். காற்று, சூரிய சக்தி மூலம் பெருமளவில் இங்கு மின் உற்பத்தி செய்ய முடியும். அதனால் மேலும் பல பொருளாதார நன்மைகள் கிடைக்கும்.

அத்துடன் எதிர்வரும் 10 வருடங்களுக்குள் யாழ்ப்பாணம் அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாற்றப்படும். எனவே நாம் அடுத்தபடியாக பொருளாதார யுத்தத்தை எதிர்கொள்ள ஆரம்பிப்போம். அதற்கான பணிகளை நாம் முன்னெடுக்க வேண்டும். அதற்கான முழுமையான ஒத்துழைப்பும் வடக்கின் மக்களிடம் இருந்து கிடைக்கும்-என்றார். (அ)

## மொட்டு...

இந்த நிகழ்வின் பின்னரே ஜனாதிபதித் தேர்தலுக்குரிய கட்டுப்பணத்தை மொட்டு கட்சி செலுத்தவுள்ளது.

மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கும் நிகழ்வு மகிந்த ராஜபக்ஷ தலைமையில் தாமரை தடாகத்தில் 7 ஆம் திகதி காலை நடைபெறும் என்று ராஜபக்ஷ குடும்ப உறுப்பினரான உதயங்க வீரதுங்க தெரிவித்தார். (அ)

## சஜித்தை...

இதற்கு இந்த அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி ஊழல் மோசடிகளை கண்டு டீல் செய்து மௌனித்திருக்கும் கட்சியல்ல. உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்துக்கு மதிப்பளிக்கிறோம். இன்று சம்பிரதாய எதிர்க் கட்சி இல்லை.

டீல் எம்மிடம் இல்லை. சஜித் பிரேமதாசவிடம் டீல் இல்லை. விஸா மோசடி, பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி எந்த ஒரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. வழக்கு தொடுக்கவில்லை. ஆகவே பொதுமக்கள் சிந்தித்து டீல் அற்ற தரப்பினரை தெரிவு செய்ய வேண்டும். தேசிய மக்கள் சக்தியினர் கருத்துக்களை முன்வைக்கின்றனர். ஆனால் நடவடிக்கைகளை எடுத்ததாக தெரியவில்லை. அரச புலனாய்வு அறிக்கைகள் அடங்கலாக சகல கருத்துக் கணிப்புகளிலும் சஜித் பிரேமதாஸவே முன்னிலையில் இருப்பதாக வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது. ஆகவே தான் சகல தரப்புகளும் ஒன்றிணைந்து சஜித் பிரேமதாஸவை தோற்கடிக்க பாடுபட்டு வருகின்றனர். மக்கள் ஆணையால் சஜித் இந்த தேர்தலில் வெற்றி பெறுவார் - என்றார். (அ)

## ரணிலுடன்...

கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தனி வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கு எமது கட்சி முடிவெடுத்துவிட்டது. இந்த முடிவு மாறாது. எமது வேட்பாளர் விரைவில் பெயரிடப்படுவார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ள உறுப்பினர்கள் தற்போது கிராமங்களுக்கு சென்று பிறகு, அங்குள்ள மக்கள் மகிந்த ராஜபக்சவை ஆதரிப்போம் என்றே கூறுகின்றனர். எனவே, சென்றவர்களில் சிலர் மீள வரக்கூடும்.

கட்சி செயலாளரை மாற்றுவதற்கென நடைமுறை உள்ளது. மாவட்ட கூட்டங்களில் அதனை செய்ய முடியாது - என்றார். (அ)

## சஜித்...

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் திலங்க சுமதிபால மற்றும் ரோஹண லக்ஷ்மன் பியதாச ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர,

புதிய குழுவொன்றுக்கு நாட்டைக் கையளிக்க வேண்டுமானால், ஐக்கிய மக்கள் சக்திக் கூட்டமைப்பில் அதற்கான பலமான தலைவர்கள் பலர் உள்ளனர். அவர்களுடன் இணைந்து இந்தப் பயணத்தைத் தொடர வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். அதற்கான செயற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் சுதந்திரக் கட்சி எமது அடையாளத்தை வைத்துக்கொண்டு தனி தேர்தல் பிரசாரத்தை நடத்தி வருகிறோம்.

இந்த நேரத்தில் நாங்கள் சரியான முடிவை எடுத்துள்ளோம் என்று எங்கள் அன்பான கட்சி உறுப்பினர்களிடம் தெரிவித்துக் கொள்கிறோம்-என்றார். (அ)

# சாகரவின் கடிதத்துக்கு அஞ்சப்போவதில்லை!

### பியால் நிஷாந்த திட்டவட்டம்

கொழும்பு, ஒக. 04

பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எந்தக் கடிதம் அனுப்பினாலும் அஞ்சப்போவதில்லை எனத் தெரிவித்துள்ள கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த, ஜனாதிபதி ஆற்றிய சேவையால் தான் தாம் இந்த தீர்மானங்களை எடுத்ததாக கூறினார்.

சாகர காரியவசம் அனுப்பிய கடிதத்துக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்படும் உறுப்பினர்கள் எந்த தரத்தில் இருந்தாலும் கட்சியின் உறுப்புரிமையை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது. பெரமுனவின் அரசியல் குழு இந்த தீர்மானத்தை ஏகமனதாக எடுத்துள்ளதாக அதன் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கையொப்பமிட்டு வெளியிடப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது பற்றி குறிப்பிடுகையிலேயே கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த மேற்கண்டவாறு கூறினார்.

பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் கட்சித் தலைவரின் உத்தரவின் பெயரில் செயற்படுகின்றாரா அல்லது உதயங்க வீரதுங்க தலைமையிலான குழுவினால் செயற்படுத்தப்படுகின்றாரா என்ற சந்தேகம் எழுவதாகவும் சாகர காரியவசத்தை பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்குவதற்கு முன்மொழிய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்திருந்தார். (அ)

# வேட்பாளர்கள் எவருமே எனக்கு சவாலாக இல்லை!

### கூறுகின்றார் விஜயதாஸ

கொழும்பு, ஒக. 04

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரும் தனக்கு சவாலாக இல்லை என ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற உறுப்பினர்கள் வெவ்வேறு கட்சிகளுக்கு மாறினாலும் அது ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளின் எண்ணிக்கையை பாதிக்காது.

அதேவேளை, தற்போது பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 25 பேருக்கும் குறைவானவர்களே எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் மீண்டும் தெரிவு செய்யக்கூடிய தகுதியுடையவர்கள் - என்றார். (அ)

## சுன்னாகத்தில்...

அமர்ந்திருந்த பெண் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் சங்கானையைச் சேர்ந்த 51 வயதான ஆனந்தன் சிவானந்தகௌரி என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## ஈழத்தமிழ்...

இந்த நிலையில் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழர்களை கட்டாயப்படுத்தி வெளியேற்றும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட்டிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன்."

-இவ்வாறு தெரிவித்திருக்கிறார் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த ஈழத் தமிழ் அகதிகளை 1992ஆம் ஆண்டில் இதுபோல வெளியேற்றும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட்டபோது, சென்னை உயர் நீதிமன்றத்தில் நானும், மருத்துவர் இராமதாஸூம் தொடுத்த வழக்கில் உயர்நீதிமன்றம் அகதிகளை வெளியேற்றும் முயற்சிக்குத் தடை விதித்தது. மேலும், அகதிகள் தாமாக தங்கள் நாட்டுக்குச் செல்ல விரும்புகிறார்கள் என்பதை இந்தியாவில் உள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைய அதிகாரிகள் சரி பார்க்கவேண்டும். மேலும், எந்த அகதியையும் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக கட்டாயப்படுத்தி வெளியேற்றுவதற்கு நிரந்தரத் தடையை உயர்நீதிமன்றம் 27.08.1992 நாளிட்ட ஆணையின் மூலம் உறுதி செய்துள்ளது.

எனவே, உயர்நீதிமன்ற ஆணைக்கு புறம்பாக அவர்களை வெளியேற்ற இந்திய அரசு முயலுவது மனிதநேய மற்ற செயல் மட்டுமல்ல, உயர்நீதிமன்றத்தின் ஆணையை மதிக்காதப் போக்காகும். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் - என்றுள்ளது. (அ)

## துரோகம்...

இல்லை - என்றார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சி ஏதேனும் ஒரு காரணத்தால் தோல்வி அடையுமாக இருந்தால் அடுத்த கட்டமாக உங்கள் நடவடிக்கை என்ன என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்-

இதில் தோல் அடைவதற்கு இடமில்லை. தமிழ் பொது வேட்பாளர் போட்டியில் வெல்லவேண்டும் என்று வரவில்லை. எங்கள் மக்களின் பிரச்சனைகளை உலகறியச் செய்யவேண்டும் என்பதற்காகவே அவரை முன்னிலைப்படுத்துகிறோம். இதில் தோற்றுப்போக எதுவும் இல்லை. தமிழ் மக்களின் ஐக்கியத்தை வெளிப்படுத்தி தமிழர்களின் அபிலாஷைகள் என்ன என்பதை தெரியப்படுத்தும் நிலையை நாம் உண்டாக்க முடியும். இதுதான் எங்கள் பலம் - எங்கள் கணிப்பு. - என்றார். (அ)

## ரணிலுக்கு...

விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான இரத்தினபுரி மாவட்ட பொதுஜன பெரமுனவின் முன்னாள் உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் ஜானக வக்கும்புரவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்கான வேலைத்திட்டம் தொடர்பில் இந்த கலந்துரையாடல்களில் அதிகம் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பொதுஜன பெரமுனவின் கேகாலை மாவட்டத் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான கனக ஹேரத் உள்ளிட்ட 18 உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு தமது ஆதரவைத் தெரிவிக்க தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நல்லதொரு வாய்ப்பை ரணிலே குழப்பினார்!

## காமினி லொக்குகே குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 04

**எமது கட்சியுடன் இணைந்து பயணிப்பதற்கு இருந்த வாய்ப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே இல்லாது செய்துகொண்டார் - என்று பொதுஜன பெரமுன கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

பொதுஜன பெரமுன கட்சியின ரும், ஜனாதிபதியும் இணைந்தே புதிய ஆட்சியை உருவாக்கினர். ரணில் விக்கிரமசிங்கவை பிரதம ராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டது. அதன்பிறகு அவர் ஜனாதி பதி பதவிக்கு வருவதற்கும் எமது கட்சியால் நேசக்கரம் நீட்டப்பட் டது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும் கலந்துரையாடல் இடம்பெற்றது. ஆனால் இறுதி முடிவுக்கு வருவதற்குள் எமது கட்சி யில் இருந்து ஒரு பிரிவினரை எடுத்துவிட்டார். இதனையடுத்தே பேச்சுகள் நிறுத்தப்பட்டன. நாமும் ஒரு வேட்பாளரை நிறுத்தும் முடிவை எடுத்தோம்.

பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளரை தேசிய சம்மேளனத்தி லேயே மாற்ற முடியும். வீதியில் நடக்கும் கூட்டங்களால் அதனை மாற்ற முடியாது. செயலாளர் பதவி யில் மாற்றம் வராது - என்றார். (அ)

# எங்கள் ஆட்சியின் கீழ் திருட்டுக்கு இடமில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஒக. 04

எமது அரசாங்கத்தின் கீழ் திருட்டுக்கு இடமில்லை எனவும் அவ்வாறானவர்களை மன்னிக்க முடியாது என வும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித் துள்ளார்.

கம்பஹாவில் நேற்று நடைபெற்ற ரணவிரு மாநாட் டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திருட்டு, மோசடி, பொய், நிதிப் பயங்கரவாதிகளி டம் இருந்து நாட்டைக் காப்பாற்றும் வேலைத்திட்டத் தின் முன்னோடிகளாக நாம் மாறவேண்டும்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், திருடர் களைப் பிடிக்கவும், திருடர்களை விரட்டவும், திருடப் பட்ட பொருட்களை நாட்டுக்குத் திருப்பியனுப்பும் பாரிய மனிதாபிமானப் பணியின் ஒரு அங்கமாக மாறு வதற்கு அனைவரும் ஒன்றிணையவேண்டும் - என்றார். (அ)

# பெரமுனவின் கண்டி மாவட்ட அணியும் ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஒக. 04

எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெற வுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமது கட்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் கண்டி மாவட்ட கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மொட்டு கட்சியின் கண்டி மாவட்ட கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தலைமையில் நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களான இராஜாங்க அமைச் சர்களான திலும் அமுனுகம, லொஹான் ரத்வத்த உள் ளிட்டவர்களும் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

கண்டி மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர் களும், கட்சிப் பிரதிநிதிகளும் கூட்டத்தில் பங்கேற்று, ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவை தெரிவித்தனர்.

கண்டி மாவட்டத்தில் கடந்த பொதுத்தேர்தலில் மொட்டு கட்சிக்கு 8 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன. அதில் இருவர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள் ளனர். எஞ்சிய அறுவரும் ஜனாதிபதிக்கே ஆதரவு என மகிந்தானந்த குறிப்பிட்டார். (அ)

# தீர்மானத்தை மீறினால் உறுப்புரிமை நீக்கப்படும்

## மொட்டுக் கட்சி எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 04

கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராகச் செயற்படு பவர்களின் கட்சி உறுப்புரிமையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுஜன பெரமுன தெரிவித்துள் ளது.

பொதுஜன பெரமுனவின் அரசியல் குழுவில் இந்த தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் வேட்பாளரை நிறுத்துவதற்கான யோசனைகளை கட்சி ஏற்றுக்கொண்டுள்ள பின்னணி யில், அதற்கெதிராக கட்சிக்கு தெரியாமல் அல்லது நேரடியாக செயற்பட்டால் கட்சியில் அந்த உறுப்பினர் எந்த பதவியை வகித்தாலும் அந்த உறுப்பினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு நபரின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

மேலும், பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட் பாளரை தவிர வேறு எந்த வேட்பாளரையும் நேரடியா கவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரிக்கும் அல்லது கட்சி எடுக்கும் முடிவுகளுக்கு எதிராக செயற்படும் எந்த வொரு கட்சி உறுப்பினருக்கும் இது பொருந்தும் என் றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தபால்மூல வாக்காளரின் விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் நடவடிக்கை நாளை நிறைவு

கொழும்பு, ஒக. 04

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தபால்மூல வாக்காளர்களின் விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் நடவடிக்கை நாளையுடன் நிறைவடையவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விண்ணப்ப படிவத்தை பூரணப்படுத்துவதற்காக வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்களை தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியேகபூர்வ இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் காலம் நீடிக்கப்படுமென பரவும் தகவல் பொய்யானதெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, உரிய வாக்களிப்பு நிலையத்தைத் தவிர்ந்த வேறு இடங்களில் வாக்களிக்க வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தெளிவுபடுத்தியுள்ளது.

உரிய வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாது என்ற நியாயமான அச்சம் ஏற்படும்போது வேறு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்குமாறு கோர முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கடந்த 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இது தொடர்பில் பரவும் பொய் யான தகவல்களை நிராகரிப்பதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரி வித்தார். (அ)

# தேர்தலில் யாருக்கு ஆதரவு? மு.கா. இன்று தீர்மானிக்கும்

கொழும்பு, ஒக. 04

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என முஸ்லிம் காங்கிரஸ் இன்று தீர்மானிக்கவுள்ளது.

அந்தக் கட்சியின் அரசியல் உயர்பீட கூட்டம், அதன் தலைமையகமான தாருசலாமில் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இன்று இடம்பெறவுள்ளது.

இதன்போது யாருக்கு ஆதரவளிப்பது எனத் தீர்மா னித்து அறிவிக்கப்படும் எனக் கட்சியின் பேச்சாளர் ஒரு வர் தெரிவித்தார்.

தற்போது முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சக்தியு டன் இணைந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (அ)

# மொட்டு தீர்மானத்தை எதிர்க்கின்றார் எஸ்.பி.!

கொழும்பு, ஒக. 04

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் ரணிலுக்கு ஆதரவாக இரு கைகளையும் உயர்த்தியுள்ளனர்.

பொதுஜன பெரமுன தனி வேட்பாளரை முன்வைப்ப தற்கு எதிராகவும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தலைமையிலான நுவரெலியா மாவட்ட பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் உடன்பாடு தெரிவித்துள்ளனர் .

நேற்று ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய எஸ். பி.திஸாநாயக்க, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக் குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

அப்போது அங்கு கூடியிருந்தவர்கள் கைகளை உயர்த்தி ஜனாதிபதியாக ரணிலை ஆதரிப்போம் என்று தெரிவித்தனர். (அ)

# தகாத உறவுகளினால் ஏற்படும் குடும்ப தகராறுகள் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக. 04

தகாத உறவுகள் காரணமாக ஏற்படும் குடும்பத் தக ராறுகள் அதிகரித்துள்ளதாக இலங்கை பொலிஸ் பிரிவி னால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் 111,709 குடும்பத் தகராறுகள் பதிவாகியுள்ள நிலையில் 2023 ஆம் ஆண்டில் 113,188 குடும்பத் தகராறுகள் பதிவாகியுள்ளன. இந்நிலையில், தகாத உறவுகளினால் ஏற்படும் குடும்பத் தகராறுகள் கடந்த 2022 ஆம் ஆண் டில் 9,636 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 10,408 ஆகவும் அதிகரித்துள்ளன. கணவர் அல்லது மனைவியினால் ஏற்படும் துன்பு றுத்தல்கள், புறக்கணிப்புகள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் கடந்த 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 22,584 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இது தொடர்பில் காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் உளவியலாளர் ரூமி ரூபன் கருத்து தெரிவிக்கையில் -

கணவர் மனைவி இருவருக்கும் இடையில் புரிந்து ணர்வின்மை, உடலுறவின்மை, அன்பின்மை மற்றும் குடும்பத் தகராறுகள் காரணமாகத் தகாத உறவுகள் ஏற் படுவதாக தெரிவித்தார். (அ)

# பரசூட் சாகசத்தில் விபத்து; இராணுவ சிப்பாய் காயம்!

கொழும்பு, ஒக. 04

வெள்ளவாய - குடாஓயா கொமாண்டோ படை யணி பயிற்சி பாடசாலையின் நிகழ்வொன்றில், பரசூட் சாகசத்தின்போது இராணுவச் சிப்பாய் ஒருவர் காயம டைந்தார்.

அவர் தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவத்தின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் காற்றின் வேகம் அதிகரித்து வீசிய தன் காரணமாக இந்த விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org